
thinaboomi.com





**கனமழை வெள்ளத்தில் மிதக்கும் பிரேசில்-17 நகரங்களில் அவசரநிலை பிரகடனம்**
...2-ம் பக்கம்

**மும்பை-நாக்பூர் விரைவு சாலை: 11-ம் தேதி பிரதமர் நரேந்திரமோடி திறந்து வைக்கிறார்**
...3-ம் பக்கம்

**பிரபல கிரிக்கெட் வீரர் ரிக்கி பாண்டிங் மருத்துவமனையில் அனுமதி**
...7-ம் பக்கம்







● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயில், மதுரை அழகர்கோவில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ மையங்களை காணொலிக்காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அருகில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உள்ளார்.

### மதுரை, இருக்கன்குடி, பண்ணாரி உள்பட

# 5 கோவில்களில் மருத்துவ மையங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, டிச. 03-
சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயில், மதுரை, அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ மையங்களை காணொலிக் காட்சி வாயிலாக முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

2021-22ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், பக்தர்கள் அதிகளவில் வருகை புரியும் 10 திருக்கோயில்களில் தேவையான மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்களுடன் கூடிய முதலுதவி மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, முதற்கட்டமாக, திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில், மேல்மலையனூர், அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், சோளிங்கர், அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ மையங்கள் மற்றும் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் மேம்படுத்தப்பட்ட மருத்துவ மையம் ஆகியவற்றை முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்த 31.12.2021 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இராமேசுவரம், அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் திறந்து வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, 2022-23ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், பக்தர்கள் அதிகளவில் வருகை புரியும் 10 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்தாண்டு மேலும் 5 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் புதிதாக அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், இருக்கன்குடி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, அருள்மிகு பண்ணாரியம்மன் திருக்கோயில், மதுரை அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், சங்கரன்கோவில், அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் ஆகிய 5 திருக்கோயில்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ மையங்களை முதல்வர் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்த மருத்துவ மையங்களில் பணியாற்றிட தகுதியான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். முதலுதவி மற்றும் அடிப்படை சிகிச்சை மேற்கொள்வதற்கு தேவையான ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், இரத்த அழுத்தமானி, படுக்கைகள், உயிர் காக்கும் மருந்துகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளன. இதனால் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நேரத்தில் பேருதவியாக இருக்கும். இதற்கான செலவினங்கள் அந்தந்த திருக்கோயிலின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் இறையன்பு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் சந்தரமோகன், இந்துசமய அறநிலையத் துறை ஆணையர் குமரகுருபரன், கூடுதல் ஆணையர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். மதுரை, விருதுநகர், ஈரோடு, தென்காசி ஆகிய மாவட்டங்களிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் தளபதி, பூமிநாதன், ராஜா, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி, மதுரை மாவட்ட கலெக்டர் அனீஷ் சேகர், விருதுநகர் மாவட்ட கலெக்டர் மேகநாத ரெட்டி, ஈரோடு மாவட்ட கலெக்டர் கிருஷ்ணனுண்ணி, தென்காசி மாவட்ட கலெக்டர் ஆகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து கோவில்களிலும்

# செல்போன் பயன்பாட்டிற்கு தடை விதிக்க வேண்டும்

### இந்து சமய அறநிலையத்துறைக்கு ஐகோர்ட் கிளை உத்தரவு

மதுரை, டிச. 03-
தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து கோவில்களிலும் செல்போன் பயன்பாட்டிற்கு தடை விதிக்க வேண்டும் என்று இந்து சமய அறநிலையத்துறைக்கு ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. மேலும் கோவில்களின் மாண்பை பாதுகாக்கும் வகையில் ஆடைகளிலும் கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்று இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு நீதிபதிகள் மகாதேவன், சத்ய நாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வு அறிவுறுத்தியுள்ளது.

திருச்செந்தூர் முருகன் கோவிலில் அர்ச்சகராக பணியாற்றக்கூடிய சீதாராமன் என்பவர் ஐகோர்ட் மதுரைக் கிளையில் பொதுநல வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அதில், திருச்செந்தூர் முருகன் கோவிலில் செல்போன் பயன்பாட்டிற்கு தடை விதிக்க வேண்டும். குறிப்பாக கோவில் சிலைகளை புகைப்படம் எடுப்பதே சிலை திருட்டுக்கு வழிவகுக்கிறது.

அதனால் கோவில்களில் செல்போன் பயன்பாட்டிற்கு தடை விதிக்க வேண்டும் என மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் மகாதேவன் அடங்கிய அமர்வில் கடந்த செப்டம்பர் மாதம் விசாரணைக்கு வந்த போது, இந்து அறநிலையத்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞரிடம் நீதிபதிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

குறிப்பாக கோவிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் நாகரிகமான உடை அணிவது கிடையாது. லெக்கின்ஸ் மற்றும் அரை டவுசர் அணிந்து கொண்டு கோவிலுக்கு வருகின்றனர். இது வேதனை அளிக்கின்றது. கோவில்கள் என்பது சுற்றுலாத்தலங்கள் இல்லை. அது மக்களின் பக்தியை வெளிப்படுத்தக்கூடிய இடமாக இருக்கின்றது என காட்டமாக தெரிவித்தனர்.

மேலும் அனைத்து கோவில்களிலும் செல்போன் பயன்படுத்தப்படுகிறது. கோவில் சிலைகளுக்கு முன் நின்று செல்பி எடுத்து அதனை சமூகவலைதளங்களில் பதிவிடுவது தொடர்கதையாகி வருகிறது.

இது மட்டுமல்லாமல் அந்த கோவிலில் அர்ச்சகர்களாக இருக்கக் கூடியவர்களே கோவிலுக்குள் செல்பி எடுத்துக் கொண்டு தங்களின் யூடியூப் பக்கத்தில் பதிவேற்றம் செய்கிறார்கள்.

(கடைசி பக்கம் பார்க்க)

# உதவிப்பேராசிரியர் நியமன அறிவிப்பு ரத்து: தமிழக அரசு

சென்னை, டிச. 03-
2019-ம் ஆண்டு வெளியிடப்பட்ட உதவி பேராசிரியர் நியமனம் தொடர்பான பழைய அறிவிப்பாணையை தமிழக அரசு ரத்து செய்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் அரசு கல்லூரிகளில் உதவி பேராசிரியர் மற்றும் பேராசிரியர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். முன்னதாக கடந்த 2019-ம் ஆண்டில் 2,331 உதவி பேராசிரியர்கள் பணியிடங்களை நிரப்ப 2019-ம் ஆண்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்நிலையில் 4,000 கல்லூரி துணை பேராசிரியர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை விரைவில் தொடங்கும் என உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அறிவித்திருந்தார். அதன்படி தற்போது புதிதாக 4 ஆயிரம் பேரை நியமனம் செய்ய அரசாணை வெளியிடப்பட்டது. இதையடுத்து 2019-ம் ஆண்டு வெளியிடப்பட்ட உதவி பேராசிரியர் நியமனம் தொடர்பான பழைய அறிவிப்பாணையை தமிழக அரசு ரத்து செய்துள்ளது.

### உயர்சிறப்பு மருத்துவ படிப்பில்

# 50 சதவீத இடஒதுக்கீட்டை தமிழக அரசு மருத்துவர்களுக்கு வழங்கலாம்

### அனுமதி அளித்து சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, டிச. 03-
அரசு மருத்துவர்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கியதற்கு எதிரான வழக்கில் நடப்பாண்டு மாணவர் சேர்க்கை நடத்த சுப்ரீம் கோர்ட் அனுமதித்துள்ளது.

அரசு மருத்துவர்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கிய தமிழக அரசின் முடிவை எதிர்த்து கார்த்திகேயன் என்பவர் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கின் தொடர்பான விசாரணையின் போது, தமிழகத்தில் நடப்பாண்டு சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப்படிப்பில் அரசு மருத்துவர்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கலாம் என சுப்ரீம் கோர்ட் நேற்று தெரிவித்துள்ளது.

அரசு மருத்துவர்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு வழங்கியதற்கு எதிரான வழக்கில் நடப்பாண்டு மாணவர் சேர்க்கை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 15 நாள்களில் மாணவர் சேர்க்கையை நடத்தவும் 16-வது நாள் எத்தனை இடங்கள் நிரப்பாமல் உள்ளதோ அதனை மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்..

தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளில் 50 சதவீத சூப்பர் ஸ்பெஷாலிட்டி இடங்களை ஒதுக்குவது தொடர்பாக கடந்த ஆண்டு சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவை தொடரலாமா என்பது குறித்து சுப்ரீம் கோர்ட்டில் விளக்கம் அளிக்குமாறு தமிழக அரசுக்கும், மனுதாரருக்கும் சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டிருந்தது. வழக்கு விசாரணையின் போது சென்னை ஐகோர்ட் நீதிபதி சுரேஷ் குமார் கூறுகையில்,

2022-2023 ஆம் கல்வியாண்டில் தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள சூப்பர் ஸ்பெஷாலிட்டி படிப்புகளில் 50 சதவீத இடங்களை நிரப்புவதற்கான கலந்தாய்வை நடத்த தமிழக அரசு முடிவு செய்தது. கடந்த ஆண்டு, இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட் பிறப்பித்த உத்தரவு குறித்து ஏதேனும் விளக்கம் பெற சுப்ரீம் கோர்ட்டை அணுகுவது என்பது மாநில அரசு மற்றும் மனுதாரர்களின் விருப்பம் என்றார்.

10 நாட்களுக்குள் சுப்ரீம் கோர்ட்டிடம் விளக்கம் பெற மனுதாரர்களுக்கும் அரசுக்கும் நீதிமன்றம் அனுமதி அளித்து இருந்தது. இருப்பினும், 25-11-2022 முதல் விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்படுவதற்கான அட்டவணையின்படி மத்திய அதிகாரிகள் கவுன்சிலிங்கைத் தொடர விரும்பினால், அவர்கள் அதையே தொடரலாம் என்றும் ஐகோர்ட் உத்தரவிட்டிருந்தது.

இதைத்தொடர்ந்து, மத்திய அரசு, அந்த அரசாணையை குறிப்பிடாமல், தமிழகத்தில் 100 சதவீத சூப்பர் ஸ்பெஷாலிட்டி இடங்களுக்கான பொது கவுன்சிலிங்கிற்கான ஆணையை வெளியிட்டது. ஆனால், இறுதியில், சுப்ரீம் கோர்ட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி படிப்புகளுக்கான கவுன்சிலிங்கை நடத்துமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. அதாவது முழு 100 சதவீத இடங்களுக்கான கவுன்சிலிங் 2020-2021 கல்வியாண்டுக்கு நடத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

ஆனால், அடுத்த கல்வியாண்டில் அதாவது 2021-2022க்கு, 2-11-2020 தேதியிட்ட உத்தரவின் மூலம் 2020-2021 கல்வியாண்டிற்கு வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவை தொடர தேவையில்லை என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இட ஒதுக்கீட்டைக் கருத்தில் கொண்டு 2021-2022 ஆம் கல்வியாண்டுக்கான கவுன்சிலிங்கைத் தொடர தமிழக அரசுக்கு எந்த தடையும் இருக்கவில்லை.

### பொங்கல் பரிசுக்காக ஏற்கனவே வங்கிக்கணக்கு வைத்துள்ள

# ரேசன் அட்டைதாரர்களிடம் ஆதாரை இணைக்க சொன்னால் மட்டும் போதும்

### அதிகாரிகளுக்கு கூட்டுறவு சங்க பதிவாளர் உத்தரவு

சென்னை, டிச. 03-
பொங்கல் பரிசாக ரூ. 1000 வழங்குவதற்காக ஏற்கனவே வங்கிக் கணக்கு வைத்துள்ள ரேசன் அட்டைதாரர்களிடம் ஆதார் எண்ணை இணைக்க அறிவுறுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு கூட்டுறவு சங்க பதிவாளர் உத்தரவிட்டுள்ளார்.

வருகிற பொங்கல் பண்டிகைக்காக ரேசன் கடைகளில் பொங்கல் பரிசாக ரூ.1000 வழங்கப்படும் என தகவல்கள் வெளியாகி வருகிறது. இந்த பணத்தை ரேசன் கார்டுதாரர்களின் வங்கி கணக்கில் செலுத்த அரசு ஆலோசித்து வருகிறது. இதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுடன் பலமுறை ஆலோசனை நடத்தி உள்ளார். இந்த நிலையில் பொங்கல் பணம் வழங்குவதற்கு வசதியாக ரேசன் அட்டைதாரர்கள் அனைவருக்கும் வங்கி கணக்கு உள்ளதா? என ஆய்வு செய்யப்பட்டது. இதில் 14,86,582 பேருக்கு வங்கி கணக்கு இல்லாதது தெரியவந்துள்ளது. எனவே வங்கி கணக்கு இல்லாதவர்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகளில் கணக்கு தொடக்க தேவையான ஏற்பாடுகளை செய்யுமாறு அதிகாரிகளை அரசு அறிவுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக தமிழக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அ.சண்முக சுந்தரம், அனைத்து மண்டல இணைப் பதிவாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழகம் முழுவதும் உள்ள ரேசன் அட்டைதாரர்களில் 14.86 லட்சம் ரேசன் அட்டைதாரர்களுக்கு வங்கிக் கணக்கு எதுவும் இல்லை. இவர்களில் பலர் வங்கிக் கணக்கு வைத்திருந்தாலும், ஆதார் நம்பரை இணைக்காததால், வங்கிக் கணக்கு இல்லை என்றே தரவுகள் தெரிவிக்கின்றன. இவர்களில் யாராவது ஏற்கனவே வங்கிக் கணக்கு வைத்திருந்தால் அதன் விவரங்களை பெறவும், கணக்கு இல்லாதவர்களுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் ஜீரோ பாலன்ஸ் (பணமில்லாத) வங்கிக் கணக்கை தொடங்க ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை பின்பற்றுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படுகின்றன. வங்கிக் கணக்கு எண் இல்லாத ரேசன் அட்டைதாரர்களுக்கு விவரக் குறிப்புகள் அடங்கிய தாளுடன் சேர்த்து, அருகில் உள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கிளையை நேரில் அணுகி ஜீரோ பாலன்ஸ் கணக்கை தொடங்க வேண்டும். அந்த விபரங்கள் அடங்கிய படிவத்தை பூர்த்தி செய்து 4 நாட்களுக்குள் அந்தந்த ரேசன் கடைகளில் ஒப்படைக்க வேண்டும்.


ஏற்கனவே வங்கி கணக்கு எண் வைத்திருந்தால், சம்பந்தப்பட்ட ரேசன் கடைப் பணியாளர் அவர்களது பகுதியின் கீழ் வரும் ரேசன் அட்டைதாரர்களின் வீடுகளுக்கு நேரிடையாக சென்று, அவர்களின் வங்கி கணக்கு எண், பாஸ் புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகல் மற்றும் அவற்றுடன் ரேசன் அட்டை நம்பர், குடும்பத் தலைவர் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு வழங்கும்படி அவர்களை அறிவுறுத்தி, அந்தத் தகவல்களை கேட்டுப் பெறவேண்டும்.

கடந்த 30.11.2022 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு முக்கியமான திருத்தம் வெளியிடப்படுகிறது. ஏற்கனவே வங்கி கணக்கு எண் வைத்துள்ள குடும்ப அட்டைதாரர்கள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறை கீழ்கண்டவாறு திருத்தம் செய்து உத்தரவிடப்படுகிறது. 14,86,582 குடும்ப அட்டைதாரர்களில் ஏற்கனவே வங்கி கணக்கு வைத்துள்ளவர்களை வங்கி கணக்கு எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்க சொல்லி அறிவுரை வழங்கினால் மட்டுமே போதுமானது. அவர்கள் குறித்து வேறு எந்த தகவல்களையும் பெற வேண்டியது இல்லை. வங்கி கணக்கு எண் இல்லாதவர்களை பொறுத்தவரையில் வெளியிடப்பட்டுள்ள நடைமுறையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.


இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -415.69 | -116.40 |
| பாயிண்ட் 62868.5 | பாயிண்ட் 18696.1 |



**தங்கம்**
1 சவரன் ₹40,160
1 கிராம் ₹5,020



**வெள்ளி**
1 கிலோ ₹70,500
1 கிராம் ₹70.50

**டாலர்** ₹81.45

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# மனித மூளைக்குள் சிப் பொருத்தி விரைவில் சோதனை: எலான் மஸ்க்

**சான்பிரான்சிஸ்கோ, டிச. 03-**

மனித மூளைக்குள் சிப் ஒன்றை பொருத்தி மனிதர்கள் மத்தியில் சோதனை செய்ய உள்ளதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

மூளைக்குள் சிப்பை பொருத்தி, அதனை கணினியுடன் இணைத்து, அதன் மூலம் கணினியுடன் நேரடி உரையாடலை ஏற்படுத்தும் வகையில் இந்த பரிசோதனையை விரைவில் மேற்கொள்ள இருப்பதாகவும், அந்த சிப்களில் ஒன்றை தானே செலுத்தி கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் எலான் மஸ்க் கூறியிருக்கிறார்.

இந்த சோதனை தற்போது குரங்குகளிடம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் மனிதர்கள் மத்தியில் சோதனை செய்யப்பட உள்ளது. அதன் மூலம், மனதில் நினைப்பதை கணினி மூலம் செயல்படுத்த முடியும். இந்த பரிசோதனை முயற்சிக்கு தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, தங்களை அனுமதிக்குமாறு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.



எலான் மஸ்கின் ஸ்டார்ட் அப் நிறுவனமான நியூராலிங்க் இதனை மேற்கொள்கிறது. இன்னும் 6 மாதங்களில் மனிதர்களிடம் நியூராலிங்க் சோதனை தொடங்கும். மனிதர்கள் மத்தியில் இந்த சோதனையை மேற்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம் என்று எலான் மஸ்க் தெரிவித்தார்.

# கொடநாடு வழக்கு விசாரணை ஜன.27-ம் தேதிக்கு ஒத்திவைப்பு

**ஊட்டி, டிச. 03-**

கொடநாடு வழக்கு தொடர்பான விசாரணை ஜனவரி மாதம் 27-ம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

கொடநாடு கொலை மற்றும் கொள்ளை தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில் இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டது. இந்நிலையில் இந்த வழக்கு விசாரணையானது உதகை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி முருகன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதில் அரசு தரப்பு வழக்கறிஞர்கள், சி.பி.சி.ஐ.டி. புலனாய்வு அதிகாரிகள் மற்றும் இந்த வழக்கில் முக்கியக் குற்றவாளியாக கூறப்படும் சயான், வாளையார் மனோஜ் உள்ளிட்டோர் நேரில் ஆஜராகினர்.

விசாரணையில் அரசு தரப்பு தனிப்படை போலீசார், இதுவரை நடத்திய விசாரணையின் அடிப்படையில் 320 சாட்சியங்களிடம் மேலும் கூடுதலாக விசாரணை நடத்த சி.பி.சி.ஐ.டி. அனுமதி கோரப்பட்டது. அரசு தரப்பு மூலம் சாட்சிகள் மற்றும் 720 தொலைபேசி உரையாடல் பதிவுகள் குறித்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்த கூடுதல் அவகாசம் கேட்கப்பட்ட நிலையில், கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணையை ஜனவரி 27-ம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு சமவாய்ப்பு வழங்க உறுதியேற்போம்: முதல்வர்

**சென்னை, டிச. 03-**

மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்பு வழங்க உறுதியேற்போம் என்று சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது,

ஒவ்வோராண்டும் டிசம்பர் மாதம் 3-ம் நாள் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளை சமுதாயத்தில் ஒருங்கிணைத்து, சம உரிமையுடன், வாழ்வதற்கு ஏற்ற சூழலை அமைத்து, அவர்களுக்கு உரிய வாய்ப்பினை வழங்க அனைவரும் உறுதி மேற்கொள்வதுடன், இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக போதுமான விழிப்புணர்வை சமுதாயத்தில் ஏற்படுத்தும் விதமாக இந்த நாள் அமைந்துள்ளது.


இந்நாளில், மாற்றுத்திறனாளிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த ஏதுவாக விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் விழாக்கள் நடத்தப்பட்டும், மாற்றுத்திறனாளிகள் சேவையினை ஊக்குவிக்கும் வகையில் மாநில விருதுகள் வழங்கப்பட்டும் வருகிறது.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களின் திறனுக்கேற்ற தொழிற்பயிற்சிகள் வழங்கி வேலைவாய்ப்பினை உருவாக்கவும், அவர்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தியும், அவர்கள் தன்னிச்சையாக பிறரைச் சாராமல் வாழ்வதற்கு பயன் பெறும் நவீன உதவி உபகரணங்கள் பற்றியும் விவரங்களைக் காட்சிப்படுத்தியும், இந்த நாள் மாநிலம் முழுவதும் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்நாளில், நாம் அனைவரும் மாற்றுத்திறனாளிகளுக்கு சமவாய்ப்புகள் வழங்கியும், அவர்களுக்கு தடையற்ற சூழலை அமைத்தும் அவர்களை நம் வாழ்வில் ஒருங்கிணைப்போம் என உறுதி கொள்வோமாக. இவ்வாறு அந்த வாழ்த்து செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# கனமழை வெள்ளத்தில் மிதக்கும் பிரேசில்

## 17 நகரங்களில் அவசர நிலை பிரகடனம்

**பரானா, டிச. 03-**



கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக பிரேசில் நகரங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் 17 நகரங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பிரேசில் நாட்டில் பாரானா மற்றும் சாண்டா கேடரன் உள்பட பல மாகாணங்களில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இடைவிடாது பெய்து வரும் மழையால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் வீடுகளை வெள்ளம் சூழ்ந்து உள்ளதால் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வர முடியாமல் தவித்து வருகின்றனர். உயிர் பிழைப்பதற்காக அவர்கள் வீட்டு மாடிகளில் தஞ்சம் புகுந்து உள்ளனர்.

பல நகரங்கள் வெள்ளக் காடாக காட்சி அளிக்கிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கி விட்டது. மீட்பு படையினர் தொடர்ந்து மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வெள்ளத்தில் சிக்கி தவிப்பவர்களை ராணுவ ஹெலிகாப்டர் மூலம் மீட்கும் பணி நடந்து வருகிறது.

தெற்கு பிரேசில் பாரானா மாகாணம் போலாரது என்ற இடத்தில் உள்ள நெடுஞ்சாலையில் கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 2 பேர் இறந்தனர். அந்த சமயம் 15-க்கும் மேற்பட்ட வாகனங்கள் அந்த ரோட்டில் சென்று கொண்டிருந்தன. நிலச்சரிவில் அந்த வாகனங்கள் அடித்து செல்லப்பட்டது.

இதில் அந்த வாகனங்களில் பயணம் செய்த 30-க்கும் மேற்பட்டவர்களை காணவில்லை. அவர்கள் கதி என்னவென்று தெரியவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. தொடர் மழையால் பிரேசிலில் 17 நகரங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது.

## மழைக்கால விபத்துக்களை தடுக்க

# மின் இணைப்பு உள்ளவர்கள் கட்டாயம் ஆர்.சி.டி. கருவியை பொருத்த வேண்டும்

## மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு



**சென்னை, டிச. 03-**

மின் இணைப்பு உள்ளவர்கள் ஆர்.சி.டி.( *Residual Current Device*) கருவியை பொருத்துவது கட்டாயம் என்று மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வீடு, கடை, கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட இடங்களில் மின் நுகர்வோர்கள் ஆர்.சி.டி. கருவி பொருத்த தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வலியுறுத்தியுள்ளது. மின்கசிவினால் ஏற்படும் மனித உயிரிழப்புகளை தடுக்க, தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் ஆர்.சி.டி எனப்படும், உயிர்காக்கும் சாதனத்தை மின் இணைப்பில் பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலும் மழைக் காலங்களில் ஏற்படும் விபத்துகளை தடுக்கவே இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறியுள்ள மின்சார வாரியம், ஆயிரங்கள் செலவில் ஆர்.சி.டியை நிறுவுவதன் மூலம் விலைமதிப்பற்ற உயிர்கள் காப்பாற்றப்படும் என தெரிவித்துள்ளது. வீடு, கடை, தொழில், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட இடங்களில் அனைத்து வகையான மின் நுகர்வோர்களும் இதை பொருத்த வேண்டும் என்றும்,உயிர் பாதுகாப்பின் அடிப்டைத் தேவையான ஆர்.சி.டி சாதனத்தை அவரவர் மின்னிணைப்பில் பொருத்தி விபத்தை தவிர்க்குமாறும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

## மின் கட்டணம், விலைவாசி உயர்வுகளை கண்டித்து

# தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. போராட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**கோவை, டிச. 03-**



மின் கட்டணம் உயர்வு, விலைவாசி உயர்வு, சொத்து வரி உயர்வு, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஆகியவற்றை கண்டித்து தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

மின்கட்டணம், சொத்து வரி, பால் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், கோவை மாவட்டத்தை தி.மு.க. அரசு புறக்கணிப்பதாகவும் குற்றம்சாட்டி கோவை சிவானந்தா காலனியில் நேற்று அ.தி.மு.க. சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமை வகித்தார். உண்ணாவிரத போராட்டத்தை முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

அ.தி.மு.க. மீதான அவதூறு பிரச்சாரத்தை முதல்வர் ஸ்டாலின் நிறுத்தி கொள்ள வேண்டும். கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் தமிழகத்தை பாதாளத்துக்கு கொண்டு சென்று விட்டதாக முதல்வர் குற்றம் சாட்டி வருகிறார். 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சி பொற்கால ஆட்சி. அந்த ஆட்சியில் ஏராளமான திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. வரலாற்று சிறப்புமிக்க அ.தி.மு.க இயக்கத்தை பற்றி பேசுவதற்கும் தகுதி வேண்டும்.

ஒரே நேரத்தில் சொத்து வரி, மின்கட்டணம் உயர்த்தி மக்கள் மீது சுமையை ஏற்றி உள்ளனர். மின் கட்டண உயர்வை குறைக்க வேண்டும். அல்லது கைவிட வேண்டும். மாதந்தோறும் சிலிண்டர், கட்டுமான பொருட்கள் அத்தியவாசிய பட்டியலில் சேர்க்கப்பட்டு மக்கள் வாங்குகிற அளவுக்கு குறைக்கப்படும் என தெரிவித்தனர். ஆனால் எந்த வாக்குறுதியையும் தி.மு.க. நிறைவேற்றவில்லை.

அ.தி.மு.க ஆட்சியில் நல்ல திட்டங்கள் மற்றும் மக்கள் பெற்ற பலன் குறித்து நான் நேருக்கு நேர் விவாதிக்க தயாராக உள்ளேன். நீங்கள் செய்த திட்டங்கள் மக்கள் பெற்ற பலன்கள் குறித்த என்னுடன் பேச நீங்கள் தயாரா? மின் கட்டணம் உயர்வு, விலைவாசி உயர்வு, சொத்து வரி உயர்வு, சட்டம் ஒழுங்கு சீர்குலைவை கண்டித்து தமிழகம் முழுவதும் அ.தி.மு.க. சார்பில் போராட்டம் நடத்தப்படும். வருகிற 9-ம் தேதி பேரூராட்சி பகுதிகளிலும், 12-ம் தேதி அனைத்து ஊராட்சி ஒன்றிய தலைநகரங்களிலும் போராட்டம் நடத்தப்படும். அதே போன்று வருகிற 13-ம் தேதி நகராட்சி, மாநகராட்சி பகுதிகளிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஜோபைடனுக்கு கொலை மிரட்டல் கடிதம் அனுப்பியவருக்கு 33 மாத சிறை

**வாஷிங்டன், டிச. 03-**

அமெரிக்க அதிபரை மிரட்டியதற்காக ஜார்ஜியாவைச் சேர்ந்த ஒரு நபருக்கு 33 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அந்த நபர் அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு கொலை மிரட்டல் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஜார்ஜியாவின் பார்னெஸ்வில்லியை சேர்ந்தவர் 56 வயதான டிராவிஸ் பால். இவர் உள்ளூர் நீதிபதிகள், சட்ட அமலாக்கத்திற்கு எதிராக பல கொலை மிரட்டல்கள் அனுப்பியுள்ளார். ஒரு வித வெள்ளை தூள் போன்ற பொருள் அடங்கிய அச்சுறுத்தல் கடிதம் பல அனுப்பியுள்ளார். டிராவிஸ் பால் பல்வேறு உள்ளூர் மற்றும் மாவட்ட அரசாங்க அலுவலகங்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் கொலை மிரட்டல் கடிதம் அனுப்பியுள்ளார்.

அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் விசாரணையில், இவர் மற்றொரு நபரின் பெயரை மாற்றுப் பெயராகப் பயன்படுத்தி இது போன்ற தொடர்ச்சியான கடிதங்களை அனுப்பி வருவது தெரியவந்தது. இதனையடுத்து அவர் 7,500 அமெரிக்க டாலர் அபராதம் செலுத்த வேண்டும் மற்றும் 33 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து தலைமை அமெரிக்க மாவட்ட நீதிபதி மார்க் டிரெட்வெல் உத்தரவிட்டார்.

# நாடு முழுவதும் ஒரே நாடு, ஒரே மின் கட்டண கொள்கை வேண்டும்

## பீகார் முதல்வர் நிதிஷ் குமார் சொல்கிறார்



**பாட்னா, டிச. 03-**

நாடு முழுவதும் ஒரே நாடு, ஒரே மின்கட்டணம் கொள்கை வேண்டும் என்று பீகார் முதல்வர் நிதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

பாட்னாவில் ரூ.15 ஆயிரத்து 871 கோடி மதிப்பிலான மின்துறை திட்டங்களை அம்மாநில முதல்வர் நிதிஷ்குமார் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:-

நாட்டில் ஒருசில மாநிலங்கள், மற்ற மாநிலங்களை விட அதிக விலைக்கு மின்சாரத்தை கொள்முதல் செய்ய வேண்டி இருக்கிறது. உதாரணமாக, மத்திய அரசின் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து பீகார் மாநிலம் மற்ற மாநிலங்களை விட அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்கி வருகிறது. அந்த மின்சாரத்தை பொதுமக்களுக்கு மிகக் குறைந்த விலைக்கு அளித்து வருகிறது.

எல்லா மாநிலங்களுமே நாட்டின் வளர்ச்சிக்கு தீவிர பங்காற்றுகின்றன. பிறகு ஏன் சில மாநிலங்கள் மட்டும் மின்சாரத்தை அதிக விலைக்கு வாங்க வேண்டும்? நாடு முழுவதும் ஒரே சீரான மின்கட்டணம் இருக்க வேண்டும். அதற்கு ஒரே நாடு, ஒரே மின்கட்டணம் கொள்கையை ஏற்க வேண்டும் என்று முன்பே பல முறை கூறி இருக்கிறேன். நாங்கள் அதிக விலைக்கு மின்சாரம் வாங்கி, மானிய விலையில் மக்களுக்கு கொடுக்கிறோம். இலவச மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று கூறுபவர்களை பற்றி நான் கவலைப்படவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## 6-ம் வகுப்பு புத்தகத்தில் இருந்து

# ரம்மி விளையாட்டு பாடப்பகுதி நீக்கம்

**சென்னை, டிச. 03-**

6-ம் வகுப்பு கணித பாடப் புத்தகத்தில் இருந்து ரம்மி விளையாட்டு பாடப்பகுதி நீக்கம் செய்யப்படுவதாக தமிழக பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டிற்கு தடை விதிக்கும் மசோதா நிறைவேற்றப்பட்டு கவர்னரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. இந்த விளையாட்டினால் பலர் உயிர் இழந்துள்ள நிலையில் சட்ட மசோதாவுக்கு கவர்னர் உடனே ஒப்புதல் தர வேண்டும் என கோரிக்கையும் எழுந்து வருகிறது. இந்த நிலையில் தமிழக பள்ளிக் கல்வித் துறையின் பாடத்திட்டத்தில் இருந்து ரம்மி விளையாட்டு பகுதி நீக்கம் செய்யப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். 6-ம் வகுப்பு கணித பாடப் புத்தகத்தில் ரம்மி விளையாட்டு குறித்து பாடப்பகுதி உள்ளது. அதனை நீக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பில் இருந்து வலியுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் சர்ச்சைக்குரிய ரம்மி விளையாட்டு பாடப்பகுதி அடுத்த கல்வி ஆண்டில் இருந்து முழுமையாக நீக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரம்மி விளையாட்டு பாடப்பகுதி இந்த கல்வி ஆண்டில்தான் சேர்க்கப்பட்டு இருந்தது. ஆன்லைன் விளையாட்டை தமிழக அரசு தடை செய்ய சட்டம் கொண்டு வந்துள்ள நிலையில் பாடப்புத்தகத்தில் இடம் பெறுவது முறையாக இருக்காது எனக் கருதி இந்த நடவடிக்கையை கல்வித் துறை எடுத்துள்ளது.

# ஜனநாயகம் குறித்து எங்களுக்கு வகுப்பு எடுக்க தேவையில்லை

## ஐ.நா.வுக்கான இந்திய பிரதிநிதி பேட்டி

**நியூயார்க், டிச. 03-**



ஜனநாயகத்தில் என்ன செய்ய வேண்டுமென்று எங்களுக்கு யாரும் வகுப்பெடுக்கத் தேவையில்லை என்று ஐ.நா.வுக்கான இந்திய பிரதிநிதி ருச்சிரா காம்போஜ் தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் 2021 மற்றும் 2022 ஆகிய 2 ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இந்தியா செயல்பட்டு வருகிறது. மாதந்தோறும் பாதுகாப்பு கவுன்சிலின் தலைமை பொறுப்பை ஒவ்வொரு நாடும் சுழற்சி முறையில் வகித்து வருகின்றன. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்தியா தலைவராக இருந்தது.

இந்த நிலையில், நடப்பு டிசம்பர் மாதத்துக்கு இந்தியா மீண்டும் தலைவராகி உள்ளது. அதை தொடர்ந்து ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ருச்சிரா காம்போஜ், தலைவர் இருக்கையில் அமர்ந்தார். இதனையொட்டி நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் ருச்சிரா காம்போஜிடம் இந்தியாவின் ஜனநாயகம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த காம்போஜ் கூறியதாவது,

ஜனநாயகத்தில் என்ன செய்ய வேண்டுமென்று எங்களுக்கு யாரும் வகுப்பெடுக்கத் தேவையில்லை. இந்தியா பழம்பெருமை வாய்ந்த தேசம். இந்திய ஜனநாயகத்தின் வேர்கள் 2500 ஆண்டுகளுக்கு முந்தையது. நாங்கள் எப்போதுமே ஜனநாயகமாகத் தான் இருந்துள்ளோம். அண்மைக் காலத்தை எடுத்துக் கொண்டாலும் ஜனநாயகத்தின் 4 தூண்களும் வலுவாக இருக்கின்றன.

அதுமட்டுமல்ல எங்கள் நாட்டில் சமூக வலைதளம் கூட சுதந்திரமாக இருக்கிறது. அதனால் இந்தியா தான் உலகிலேயே வலுவான ஜனநாயகம். 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாங்கள் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவை நடத்துகிறோம். எங்கள் நாட்டில் யார் வேண்டுமானாலும் அவர்கள் மனதில் இருப்பதை சொல்லும் உரிமை இருக்கின்றது. எங்கள் முன்னேற்றம் மிகவும் சிறப்பாக உள்ளது என்று தெரிவித்தார்.

## குரூப் 2 முதன்மை தேர்வர்கள் அசல் சான்றிதழ்களை

# இ -சேவை மூலம் 16-ம் தேதிக்குள் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தல்

**சென்னை, டிச. 03-**

குரூப் 2 மற்றும் 2 A முதன்மை தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது அசல் சான்றுகளை இ - சேவை மையங்கள் மூலம் வரும் 16-ம் தேதிக்குள் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் கடந்த 21.05.2022 அன்று நடத்தப்பட்ட குரூப்-2 மற்றும் 2A முதல்நிலைத் தேர்வு முடிவுகளின்படி முதன்மைத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது அசல் சான்றிதழ்களை 17.11.2022 முதல் 16.12.2022 வரை இ-சேவை மையங்கள் வாயிலாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, அனைத்து தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவன இ-சேவை மையங்களும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவைப்படும் இ-சேவை மையங்களில் கூடுதல் பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, விண்ணப்பதாரர்கள் இதனை பயன்படுத்தி தங்களுடைய சான்றிதழ்களை பதிவேற்றம் செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான உதவிக்கு அரசு கேபிள் டிவி நிறுவன கட்டணமில்லா தொலைபேசி எண் : 1800 425 2911 –ஐ தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# 90-வது பிறந்த நாள்: கி. வீரமணியின் இல்லத்திற்கு சென்று முதல்வர் வாழ்த்து



**சென்னை, டிச. 03-**
திராவிடர் கழக தலைவர் கி.வீரமணியின் 90-வது பிறந்தநாளையொட்டி அடையாறில் உள்ள அவரது இல்லத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ. வேலு மற்றும் பொன்முடி ஆகியோர் பங்கேற்று திராவிடர் கழக தலைவர் கி.வீரமணிக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர். மேலும் தி.மு.க.வின் முக்கிய பிரமுகர்களும் இந்நிகழ்வில் பங்கேற்றனர். முன்னதாக தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பதாவது,

திராவிட இயக்கத்தின் திருஞான சம்பந்தர் என்ற பேரறிஞர் அண்ணாவின் புகழுரைக்கேற்ப, 10 வயது முதல் தந்தை பெரியாரின் இலட்சியத்தை முழங்கத் தொடங்கி, இளையோருக்கு நிகராக சமூக நீதி போர்க்களத்தில் சளைக்காமல் போராடி, பகுத்தறிவு இனமான உணர்வினை ஊட்டிவரும் திராவிடர் கழக தலைவருக்கு அகவை 90 என்பதில் அகம் மகிழ்கிறேன் என பதிவிட்டுள்ளார்.

### இஸ்ரோ உளவு விவகாரம்: குற்றம்சாட்டப்பட்ட

# 4 பேருக்கு கேரள ஐகோர்ட்டு வழங்கிய முன்ஜாமீன் ரத்து

## சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு

**புது டெல்லி, டிச. 03-**
இஸ்ரோ உளவு விவகாரம் தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 4 பேருக்கு கேரள ஐகோர்ட் வழங்கிய முன் ஜாமீனை ரத்து செய்து சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.



விஞ்ஞானி நம்பி நாராயணன் இஸ்ரோவில் இருந்த போது பல ஆய்வுகளை மேற்கொண்டார். நாட்டின் விண்வெளி ஆராய்ச்சியிலும் முக்கிய பங்காற்றினார். அவர் பாகிஸ்தானுக்கு ஊழல் மற்றும் உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1994-ம் ஆண்டில், ராக்கெட்டுகள் மற்றும் செயற்கைக்கோள்கள் தொடர்பான ரகசிய தகவல்களை உளவு பார்த்ததாக நாராயணன் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்நிலையில், பல ஆண்டுகள் சிறையில் இருந்து, நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, சுப்ரீம் கோர்ட்டால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில், இஸ்ரோ உளவு விவகாரம் தொடர்பான வழக்கில் கேரள முன்னாள் டி.ஜி.பி. சிபி மேத்யூஸ் உட்பட நான்கு குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட முன்ஜாமீனை எதிர்த்து சி.பி.ஐ. வழக்கு தொடர்ந்தது. கேரள ஐகோர்ட்டின் ஜாமீன் உத்தரவை எதிர்த்து சி.பி.ஐ. சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி எம்.ஆர்.ஷா தலைமையிலான அமர்வு, கேரள ஐகோர்ட்டு தீர்ப்பை நிராகரித்து உத்தரவிட்டது.

குற்றம்சாட்டப்பட்ட 4 பேருக்கும் முன்ஜாமீன் வழங்கிய உத்தரவை சுப்ரீம் கோர்ட்டு நேற்று ரத்து செய்தது. வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை 5 வாரங்களுக்கு கைது செய்யக் கூடாது என்று கூறிய சுப்ரீம் கோர்ட்டு, குற்றம் சாட்டப்பட்ட 4 பேருக்கும் வழங்கப்பட்ட முன்ஜாமீனை மீண்டும் நான்கு வாரங்களுக்குள் பரிசீலிக்குமாறு கேரள ஐகோர்ட்டுக்கு உத்தரவிட்டுள்ளது.

# மும்பை - நாக்பூர் விரைவு சாலை: 11-ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கிறார்

**மும்பை, டிச. 03-**
மும்பை - நாக்பூர் சாலையை பிரதமர் மோடி வருகிற 11-ம் தேதி திறந்து வைக்கிறார். மும்பை - நாக்பூர் இடையே 701 கி.மீ. நீளத்துக்கு பால்தாக்கரே மகாராஷ்டிரா சம்ருத்தி மகாமார்க் 6 வழி விரைவு சாலை அமைக்கும் பணி நடந்து வருகிறது. பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் நடந்து வரும் இந்த சாலை மும்பை - நாக்பூர் இடையே நாக்பூர், வார்தா, அமராவதி, வாசிம், புல்தானா, ஜல்னா, அவுரங்காபாத், நாசிக், அகமதுநகர், தானே ஆகிய 10 மாவட்டங்கள் வழியாக செல்கிறது. மேலும் சந்திராப்பூர், பண்டாரா, கோண்டியா, கட்சிரோலி உள்ளிட்ட 14 மாவட்டங்கள் இந்த சாலையால் பயனடைகின்றன.

இந்த நிலையில் நாக்பூர் - மும்பை விரைவு சாலை திட்டத்தில் முதல் கட்டமாக நாக்பூர் - ஷீரடி இடையே 520 கி.மீ.க்கு சாலை அமைக்கும் பணிகள் முடிந்து உள்ளன. இது பொது மக்களுக்காக வருகிற 11-ம் தேதி திறந்து வைக்கப்படுகிறது. பிரதமர் மோடி கலந்து கொண்டு புதிய சாலையை மக்களுக்கு அர்ப்பணிக்கிறார். இதே போல 11-ம் தேதி மெட்ரோ ரயில் சேவையும் தொடங்கி வைக்கப்படுகிறது.

அந்த விழாவிலும் மோடி கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கார்த்திகை தீபத் திருவிழா: தி.மலையில் இன்று நடக்கிறது மகாதேரோட்டம்

**தி.மலை, டிச. 03-**
திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவின் பிரசித்தி பெற்ற மகா தேரோட்டம் இன்று நடைபெறுகிறது. காலை முதல் இரவு வரை 5 தேர்கள் அடுத்தடுத்து மாடவீதியில் பவனி வரும். இதையொட்டி 3 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 27-ம்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி விமரிசையாக நடந்து வருகிறது. தினமும் காலையிலும் இரவிலும் பஞ்சமூர்த்திகள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி மாடவீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர். தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் தீபத்திருவிழா உற்சவத்தின் 6-ம் நாளன்று இரவு வெள்ளித்தேரோட்டம் நடந்தது. வரும் 6- ம்தேதி காலை கோயிலில் பரணி தீபம் ஏற்றப்படுகிறது. அன்று மாலை 6 மணியளவில் 2,668 அடி உயர மலை உச்சில் மகா தீபம் ஏற்றப்படுகிறது. இந்நிலையில் விழாவின் 7-ம் நாளான இன்று (3-ம் தேதி) மகா தேரோட்டம் எனப்படும் பஞ்ச ரதங்கள் பவனி நடைபெறுகிறது.

இன்று அதிகாலை 5.30 மணி முதல் 7 மணிக்குள் தேரோட்டம் தொடங்குகிறது. தேரோட்டத்தின் தொடக்கமாக விநாயகர் தேர் புறப்பாடு நடைபெறும். பின்னர், சுப்பிரமணியர் தேர் மாடவீதியில் பவனி வரும். மதியம் ஒரு மணி அளவில், உண்ணாமுலையம்மன் சமேத அண்ணாமலையார் அருள்பாலிக்கும் பெரிய தேர் எனப்படும் மகா ரதம் புறப்பாடு நடைபெறும். மகா ரதம் நிலையை அடைந்ததும், பராசக்தி அம்மன் தேர் புறப்பாடு நடைபெறும்.

அம்மன் தேரை பெண்கள் மட்டுமே வடம் பிடித்து இழுத்துச் செல்வது தனிச்சிறப்பாகும். தேரோட்டத்தின் நிறைவாக, சண்டிகேஸ்வரர் தேர் பவனி நடைபெறும். தேர்ச்சக்கரங்களுக்கு கட்டைபோடும் சேவைப் பணியாளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை, ஒரே மாதிரியான சீருடை (டி- சர்ட்) வழங்கப்பட்டுள்ளன. அதோடு, அவர்களுக்கு கோயில் நிர்வாகத்தின் சார்பில் காப்பீடும் செய்யப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா கட்டுப்பாடுகளால் தடைபட்டிருந்த தேர் திருவிழா, இந்த ஆண்டு வழக்கமான உற்சாகத்துடன் நடைபெறுகிறது.

# சென்னை ஐகோர்ட்டில் வழக்காடும் மொழியாக தமிழ் இடம் பெறும்

## மத்திய சட்டத்துறை அமைச்சர் பேச்சு

**சென்னை, டிச. 03-**
சென்னை ஐகோர்ட்டில் வழக்காடும் மொழியாக தமிழ் விரைவில் இடம் பெறும் என்று மத்திய அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ தெரிவித்தார்.

சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின்12-வது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மத்திய அமைச்சர் கிரண் ரிஜ்ஜூ பேசியதாவது,

(பொதுமக்கள்) நீதித்துறையை எளிதாக அணுகுவதற்கு, பிராந்திய மொழிகளில் நீதிமன்ற நடவடிக்கைகள் இருப்பது காலத்தின் கட்டாயம். நமது பிரதமர் நமது கலாச்சாரம் மற்றும் நமது மொழியுடன் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளார். நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் நீதித்துறையில் எதிர்காலத்தில் பிராந்திய மொழிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி, சுப்ரீம் கோர்ட் மூத்த நீதிபதிகள் மற்றும் அனைத்து ஐகோர்ட் தலைமை நீதிபதிகளிடமும் ஏற்கனவே நான் பேசியுள்ளேன். ஐகோர்ட் மற்றும் அனைத்து மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களில் (எதிர் காலத்தில்) தமிழ் மொழி முக்கிய இடம் பெறுவதைக் கண்டு நாம் அனைவரும் பெருமைப்படுவோம். தமிழ் மிகச் சிறந்த மொழி, ஒரு மொழியை மட்டும் திணிப்பதை நான் எதிர்க்கிறேன். உள்ளூர் மொழிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கோவில்பட்டியில் எழுத்தாளர் கி. ரா.வுக்கு திருவுருவச் சிலை

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, டிச. 03-**
சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் கரிசல் காட்டு இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் கி. ராஜநாராயணனுக்கு ஒரு கோடியே 50 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முழு திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவரங்கத்தை காணொலிக் காட்சி வாயிலாக முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தமிழ் இலக்கியத்திற்குச் செழுமை சேர்த்த கரிசல் காட்டு எழுத்தாளர் கி. ராஜநாராயணனின் (கி.ரா.) நினைவினைப் போற்றும் வகையில், அவர் படித்த இடைசெவல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசு சார்பில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும் என்றும், அவரது படைப்பாளுமையை வெளிப்படுத்தும் வகையிலும், அவருடைய புகைப்படங்கள், படைப்புகள் ஆகியவற்றை மாணவர்களும், பொதுமக்களும் அறிந்து கொள்ளும் வகையிலும் ஓர் அரங்கம் நிறுவப்படும் என்றும், கரிசல் இலக்கியத்தை உலகறியச் செய்த பிதாமகர் கி.ராஜநாராயணனுக்கு கோவில்பட்டியில் அரசு சார்பில் சிலை அமைக்கப்படும் என்றும் 18.5.2021 அன்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

அதன்படி, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், இடைசெவல் ஊராட்சியில்,

கி. ராஜநாராயணனின் நினைவாக அவர் பயின்ற இடைசெவல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கட்டிடம் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு முதல்வரால் கடந்த 11.10.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, கோவில்பட்டியில், 220 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு கோடியே 50 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முழு திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவரங்கத்தை முதல்வர் நேற்று திறந்து வைத்தார். இந்த நினைவரங்கத்தில் நூலகம், நிர்வாக அலுவலகம், மின்னணு நூலகம், கண்காட்சி அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து அமைச்சர் சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, தலைமைச் செயலாளர் இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) சண்முகம், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோவில்பட்டியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அமைச்சர் கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் செந்தில் ராஜ், எழுத்தாளர் கி.ரா.வின் மகன்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருப்பதியில் ஜனவரி 2-ல் வைகுண்ட ஏகாதசி விழா

## 10 நாள் கொண்டாட தேவஸ்தானம் முடிவு

**திருப்பதி, டிச. 03-**
திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஜனவரி மாதம் 2-ம் தேதி வைகுண்ட ஏகாதசி விழா நடக்கிறது. இந்த விழாவை 10 நாட்கள் கொண்டாட தேவஸ்தானம் முடிவு செய்துள்ளது.



திருமலை-திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு கூட்டம் திருமலையில் உள்ள அன்னமயபவனில் நடந்தது. கூட்டத்துக்கு அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி.சுப்பா ரெட்டி தலைமை தாங்கி பேசியதாவது:-

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஜனவரி மாதம் 2-ம் தேதி வைகுண்ட ஏகாதசி விழா நடக்கிறது. வைகுண்ட துவார தரிசனத்துக்கான ஏற்பாடுகள் கடந்த ஆண்டைபோலவே இந்த ஆண்டும் செய்யப்படும். வைகுண்ட துவார தரிசனத்துக்காக 10 நாட்கள் பக்தர்கள் கோவிலுக்கு வருவார்கள். எனவே 10 நாட்கள் வைகுண்ட ஏகாதசி விழா கொண்டாடப்படும். அதற்காக, திருப்பதியில் இலவச தரிசன டோக்கன்கள் வழங்கப்படும். ஜனவரி மாதம் 2-ம் தேதி வி.ஐ.பி. பக்தர்களுக்கு (செல்ப் புரோட்டோகால்) மட்டுமே பிரேக் தரிசனம் வழங்கப்படும். ஜனவரி 2-ம் தேதியில் இருந்து 11-ம் தேதி வரை ஒரு நாளைக்கு 50 ஆயிரம் வீதம் 5 லட்சம் இலவச தரிசன டோக்கன்கள் வழங்கப்படும். இலவச தரிசன டோக்கன்கள் வழங்கும் கவுண்ட்டர் ஜனவரி 1-ம் தேதி தொடங்கப்படும்.

திருப்பதியில் உள்ள கவுண்ட்டர்கள் இலவச தரிசன டோக்கன்கள் கொடுத்துத் தீரும் வரை திறந்திருக்கும். டோக்கன் இல்லாத பக்தர்கள் திருமலைக்கு செல்லலாம். ஆனால் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். வைகுண்ட துவார தரிசனத்துக்கு நாள் ஒன்றுக்கு 25 ஆயிரம் பக்தர்கள் வீதம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூ.300 தரிசன டிக்கெட்டுகள் ஆன்லைனில் ஒதுக்கீடு செய்யப்படும் என்று அவர் கூறினார்.

# அத்திக்கடவு - அவினாசி திட்டம் ஜனவரி 15-க்குள் தொடக்கம்

## அமைச்சர் முத்துசாமி அறிவிப்பு

**சென்னை, டிச. 03-**
அத்திக்கடவு - அவினாசி திட்டம் ஜனவரி 15-க்குள் தொடங்கப்படும் என வீட்டுவசதித்துறை அமைச்சர் முத்துசாமி தெரிவித்துள்ளார்.


இது குறித்து அமைச்சர் முத்துசாமி கூறியதாவது,

கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழை காரணமாக இந்த பணிகள் தடைபட்டன. தற்போது பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அத்திக்கடவு – அவினாசி திட்டத்தை எதிர்த்த விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி திட்டத்தின் பலன்களை கூறி சம்மதிக்க வைத்துள்ளோம். இதனால், பவானி காலிங்கராயன் தடுப்பணையில் நடைபெற்று வரும் அத்திக்கடவு - அவினாசி திட்ட பணிகளை வரும் ஜனவரி 15-க்குள் முடிக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். எனவே, அத்திக்கடவு - அவினாசி திட்ட பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதால், வருகிற ஜனவரி மாதத்தில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும் என்று அமைச்சர் முத்துசாமி தெரிவித்தார்.

திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய மூன்று மாவட்ட விவசாயிகளின் 60 ஆண்டுக்கால கோரிக்கையாக இருப்பது அத்திக்கடவு - அவிநாசி திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் இந்த மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 50 லட்சம் மக்கள்வரை பயனடைவார்கள் என்று கூறப்படுகிறது.

# முன்னாள் முதல்வர் எடப்பாடி குறித்து அவதூறாக பேச ஐகோர்ட் தடை விதிப்பு

**சென்னை, டிச. 03-**
நெடுஞ்சாலைத்துறை டெண்டர் தொடர்பான விவகாரத்தில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி குறித்து அவதூறாக பேச அறப்போர் இயக்கத்திற்கு தடை விதித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.



நெடுஞ்சாலைத்துறை டெண்டரில் முறைகேடு என்ற அறப்போர் இயக்கத்தின் குற்றச்சாட்டுக்கு எதிராக ரூ.1.10 கோடி மான நஷ்ட ஈடு தரக்கோரி சென்னை ஐகோர்ட்டில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த நிலையில் இந்த வழக்கு நேற்று சென்னை ஐகோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கு ஆதரவாக டெண்டர் வழங்கப்பட்டது என்று குற்றஞ்சாட்டுவது தவறு என்றும் இது தொடர்பாக நான் எந்தவித டெண்டரிலும் கலந்து கொள்ளவில்லை என்றும் எடப்பாடி பழனிசாமி தரப்பில் வாதிடப்பட்டது. தங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் தான் எடப்பாடி பழனிசாமி மீது புகாரளித்ததாகவும் அது தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறையில் அளித்த புகாரைத் தான் சமூக வலைதளங்களில் வெளியிட்டதாகவும் அறப்போர் இயக்கத்தின் சார்பில் வாதிடப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, எடப்பாடி பழனிசாமி தொடர்ந்துள்ள வழக்கில் முகாந்திரம் இருப்பதால் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அவதூறான கருத்துக்களையோ, உண்மைக்கு புறம்பான ஆதாரமில்லாத கருத்துக்களையோ தெரிவிக்கக் கூடாது என்று அறப்போர் இயக்கத்திற்கு தடை விதித்து உத்தரவிட்டார்.

### சுப்ரீம் கோர்ட் வரலாற்றில் 3-வது முறை:

# முற்றிலும் பெண் நீதிபதிகளை கொண்ட அமர்வு அமைப்பு



**புது டெல்லி, டிச. 03-**
சுப்ரீம் கோர்ட்டின் வரலாற்றில் மூன்றாவது முறையாக முற்றிலும் பெண் நீதிபதிகளைக் கொண்ட அமர்வினை தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அமைத்துள்ளார். இது 2 பெண் நீதிபதிகளைக் கொண்ட அமர்வு ஆகும். இந்த அமர்வில், நீதிபதிகள் ஹிமா கோலி மற்றும் பேலா எம் திரிவேதி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் தற்போது சுப்ரீம் கோர்ட்டின் 11-வது எண் கோர்ட்டில் அமர்ந்து வழக்குகளை விசாரித்து வருகின்றனர்.

இந்த அமர்வுக்கு 32 மனுக்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. திருமண பிரச்சினைகள் தொடர்பான இடமாற்ற மனுக்கள் மற்றும் ஜாமீன் மனுக்கள் என வகைக்கு 10 மனுக்கள் ஒதுக்கப்பட்டதை தொடர்ந்து இரு நீதிபதிகளும் விசாரணை நடத்தினர்.

சுப்ரீம் கோர்ட்டில் முதலில் அனைத்து பெண் நீதிபதிகள் கொண்ட அமர்வு 2013-ல் அமைக்கப்பட்டது. அப்போது அந்த அமர்வில் நீதிபதிகள் கியான் சுதா மிஸ்ரா, ரஞ்சனா பிரகாஷ் தேசாய் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இரண்டாவதாக 2018-ல் அமைக்கப்பட்ட பெண்கள் அமர்வில் தமிழகத்தைச் சேர்ந்த நீதிபதி ஆர். பானுமதியும், இந்திரா பானர்ஜியும் இடம்பெற்றிருந்தனர். தற்போது சுப்ரீம் கோர்ட்டில் 3 பெண் நீதிபதிகள் பணியில் உள்ளனர். அவர்கள் ஹிமா கோலி, பேலா எம் திரிவேதி மற்றும் நாகரத்தினா ஆவார்கள். இவர்களில் நாகரத்தினா, 2027-ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி ஆவார். அப்போது அவர் நாட்டின் சுப்ரீம் கோர்ட்டின் முதல் பெண் தலைமை நீதிபதி என்ற பெயரை பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சத்தீஸ்கரில் சுண்ணாம்பு கல் சுரங்கத்தில் மண் சரிவில் சிக்கி 7 தொழிலாளர்கள் பலி

**ராய்ப்பூர், டிச. 03-**
சத்தீஸ்கர் மாநிலம் பஸ்டர் மாவட்டத்தில் உள்ள சுரங்கத்தில் மண் சரிந்து 7 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

சத்தீஸ்கரில் இருந்து 11 கிலோ மீட்டர் தொலைவில் மல்கான் கிராமத்தில் உள்ள சுண்ணாம்பு கல் சுரங்கத்தில் கிராம மக்கள் வேலை செய்து வருகின்றனர். அந்த சுரங்கத்தில் நேற்று திடீரென மண்சரிவு ஏற்பட்டு விபத்து நிகழ்ந்தது. இந்த மண்ச்சரிவில் முதற்கட்டமாக 12 பேர் சிக்கிக் கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. அதில் இதுவரை 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது. மேலும் 5 பேரை மீட்கும் முயற்சியில் காவல்துறை, மாநில பேரிடர் மீட்பு குழுவினர் ஈடுபட்டுள்ளனர். மேலும் தேசிய பேரிடர் மீட்பு குழுவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும் பலர் இந்த மண் சரிவில் சிக்கியிருக்க வாய்ப்பிருப்பதாக கிராமமக்கள் தெரிவித்துள்ளனர்.

### கார்த்திகை கடைஞாயிறு பெருவிழா:

# திருநாகேஸ்வரம் கோவிலில் கொடியேற்றத்துடன் துவங்கியது

**தஞ்சை, டிச. 03-**
நவக்கிரகங்களில் ராகு பகவானுக்குரிய ஸ்தலமாக போற்றப்படும் திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி திருக்கோயிலில் கார்த்திகை கடைஞாயிறு பெருவிழாவை முன்னிட்டு கொடியேற்ற நிகழ்ச்சி நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகேயுள்ள திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி திருக்கோயில் நவக்கிரகங்களில் ராகுவிற்குரிய ஸ்தலமாக போற்றப்படுகிறது. இத்தலத்தை திருமால், பிரம்மா, இந்திரன், சந்திரன், சூரியன் ஆகிய தேவர்களும், கௌதமர், மார்கண்டேயர், பராசரர் ஆகிய முனிவர்களும், நளன், பகீரதன், சம்புமாலி, சந்திரவர்மா ஆகிய மன்னர்களும் வழிபட்டுள்ளனர்.

இத்தலத்தில் ஸ்ரீராகுபகவான் திருமண கோலத்தில் நாகவல்லி, நாககன்னி என்ற இரு மனைவியருடன் மங்களராகுவாக அருள்பாலிக்கிறார். இவருக்கு பால் அபிஷேகம் செய்வித்தால் ராகுதோஷம் நீங்கும்.

இத்தகைய பெருமைமிகு தலத்தில் ஆண்டுதோறும் கார்த்திகை கடைஞாயிறு பெருவிழா 11 நாள்களுக்கு சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதுபோல இவ்வாண்டும் இவ்விழா நேற்று காலை அலங்கரிக்கப்பட்ட பஞ்சமூர்த்திகள் எழுந்தருள, கொடிமரத்திற்கு மாப்பொடி, திரவியப்பொடி, மஞ்சள் பொடி, பஞ்சாமிர்தம், பால், தயிர், சந்தனம் மற்றும் கடங்களில் உள்ள புனிதநீரை கொண்டு, சிறப்பு அபிஷேகங்கள் செய்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் ஜபிக்க, நாதஸ்வர மேள தாள மங்கள வாத்தியங்கள் முழங்க தனுர் லக்னத்தில் நந்திம்பெருமான் பொறித்த திருக்கொடி கொடிமரத்தில் ஏற்றப்பட்டது. தொடர்ந்து மகா தீபாராதனைகள் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக 8- ம் தேதி வியாழக்கிழமை மாலை திருக்கல்யாணமும், 10-ம் தேதி சனிக்கிழமை திருத்தேரோட்டமும் தொடர்ந்து 13-ம் தேதி திங்கள்கிழமை விடையாற்றி உற்சவத்துடன் இவ்வாண்டிற்கான கார்த்திகை கடைஞாயிறு பெருவிழா இனிதே நிறைவு பெறுகிறது.

# முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ்ஸை சந்தித்த தூத்துக்குடி, சேலம், தென்காசி மாவட்ட நிர்வாகிகள்

**தேனி.டிச.03.**

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் கழக ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான ஓ.பன்னீர் செல்;வத்தை தூத்துக்குடி மாநகர், தென்காசி வடக்கு, சேலம் புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இச்சந்திப்பின் போது கழக கொள்கைபரப்பு செயலாளர் புகழேந்தி, கோவை மண்டல தகவல்தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் ராஜகோபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கழக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் சார்பு அணி நிர்வாகிகளை நியமித்துள்ளார். நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் கழக ஒருங்கிணைப்பாளரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கழக ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான ஓ.பன்னீர் செல்வத்தை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் மூர்த்தி பாண்டியன் தலைமையில் செயற்குழு உறுப்பினரும், மாவட்ட மகளிரணி செயலாளரும், மாவட்ட துணை செயலாளருமான ஸ்வர்ணா, மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளர் சரவணபாண்டியன், புளியங்குடி நகர செயலாளர் துரைப்பாண்டி, துணை செயலாளர் சந்திரபாண்டியன், கடையநல்லூர் நகர செயலாளர் இசக்கிதுரை, பொருளாளர் அய்யப்பன், துணை செயலாளர் அய்யப்பன், மாவட்ட பிரதிநிதி செந்தூர்பாண்டியன், சங்கரன்கோவில் நகர இணை செயலாளர் ஆனந்தி சரவணபாண்டின் உள்ளிட்ட 350க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கியும், சால்வை அணிவித்தும் வாழ்த்துப் பெற்றனர்.

அதனை தொடர்ந்து மாவட்ட செயலாளர் எடப்பாடி ராஜேந்திரன் தலைமையில் கழக மீனவரணி துணைத்தலைவர் குமார ராஜா, எடப்பாடி நகர அவைத்தலைவர் சிவசுப்பிரமணி உள்ளிட்ட சேலம் புறநகர் மேற்கு மாவட்ட நிர்வாகிகளும், மாவட்ட செயலாளர் ஏசராஜா தலைமையில் தூத்துக்குடி மாநகர் மாவட்ட நிர்வாகிகளும் கழக ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதல்வருமான ஓ.பன்னீர் செல்வத்தை நேரில் சந்தித்து பூங்கொத்து கொடுத்தும், சால்வை அணிவித்தும் வாழ்த்து பெற்றனர்.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த மாவட்ட செயலாளர்கள் கூறும்போது தமிழகம் முழுவதும் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கழக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வத்திற்கு அமோக ஆதரவு உள்ளது. அதிமுகவை வழிநடத்தும் தகுதியும் அவருக்கு மட்டுமே உள்ளது. தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செல்ல உள்ள கழக ஒருங்கிணைப்பாளர் முதல் கூட்டத்தை எடப்பாடியில் நடத்த வேண்டும் என்றனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூரில் குட்கா கடத்தியவர் காருடன் கைது

**விருதுநகர் டிச 3.**

கர்நாடக மாநிலம் பெங்களூரில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு காரில் கடத்தி வந்த 76 கிலோ குட்காவை கடத்திய வரை போலீசார் காருடன் கைதுசெய்தனர். அவற்றை கடத்தி வந்த செல்வத்தை போலீசார் கைது செய்து மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மதுரை ரோட்டில் தனிப்படை போலீசார் வாகன சோதனை ஈடுபட்டனர். அப்போது நாகப்பட்டணம் மாவட்ட பதிவு கொண்ட காரை சோதனை செய்ததில் அதில் 76 கிலோ குட்கா இருந்ததை கண்டறிந்தனர். அதனைத் தொடர்ந்து அதையும் காரையும் பறிமுதல் செய்து ஸ்ரீவில்லிபுத்தூர் போலீசார், குட்காவை கடத்திய ஸ்ரீவில்லிபுத்தூரை சேர்ந்த பிரபு செல்வம் 37 என்பவரை கைது செய்தனர் . அதேபோல் நேற்றைய முன்தினம் தட்டாங்குளத்து பட்டியில் தங்கராஜ் 57 என்பவரின் மளிகை கடையில் இருந்த சுமார் 20 கிலோ எடையுள்ள குட்காவை பறிமுதல் செய்து அவரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மதுரை வடக்கு,தெற்கு,மாநகர் மாவட்ட கழகங்களின் சார்பில்

# 1350 கிரிக்கெட் அணிகளுக்கு ரூ.1கோடி மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள்

## தி.மு.க இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்





**திருமங்கலம்.டிச.03.**

இனமான பேராசிரியரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மதுரை வடக்கு, தெற்கு மற்றும் மாநகர் மாவட்ட கழகங்களின் சார்பில் மதுரை கலைஞர் திடலில் நடைபெற்ற மாபெரும் விழாவில் தி.மு.க இளைஞரணி செயலாளர்,சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு 1350 கிரிக்கெட் அணிகளுக்கு ரூ.1கோடி மதிப்பிலான விளையாட்டு உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இனமான பேராசிரியரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை வடக்கு, தெற்கு மற்றும் மாநகர் கழகங்களின் சார்பில் மதுரை கலைஞர் திடலில் 1350 கிரிக்கெட் அணிகளுக்கு நலத்திட்ட உதவியாக ரூ.1கோடி மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் வழங்கிடும் மாபெரும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற இந்த விழாவிற்கு மதுரை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்,அமைச்சர் பி.மூர்த்தி,மதுரை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன்,மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஆகியோர் தலைமை வகித்தனர். எழுச்சியுடன் நடைபெற்ற இந்த விழாவில் தி.மு.க இளைஞரணி செயலாளர்,சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பாளராக கலந்து கொண்டு இனமான பேராசிரியரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை வடக்கு,தெற்கு,மாநகர் மாவட்ட கழகங்களின் சார்பில் 1350 கிரிக்கெட் அணிகளுக்கு ஊக்கமளித்திடும் வகையில் ரூ.1கோடி மதிப்பிலான விளையாட்டு உபகரணங்களை நலத்திட்ட உதவியாக வழங்கி சிறப்புரையாற்றினார். இந்த விழாவில் கொட்டும் மழையின் நடுவே உதயநிதி ஸ்டாலின் பேசுகையில்: நான் கடந்த 2018-ம் ஆண்டு இளைஞரணி செயலாளராக பொறுப்பேற்றவுடன் முதல் முறையாக மதுரையில் கட்சியின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழியுடன் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் நிகழ்ச்சியில் பங்கேற்றேன்.அந்த விழா மிகப்பெரிய மாநாடு போல் நடைபெற்றது. தற்போது அதே போல் இனமான பேராசிரியரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்களுக்கு உபகரணங்களை பரிசாக வழங்கிடும் இந்த விழா மிக பிரமாண்டமாக நடைபெற்று வருகிறது.இங்கு வந்திருக்கும் நீங்கள் அனைவரும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேரில் நம்பிக்கை வைத்து வந்திருக்கிறீர்கள்.அவர் என்றென்றைக்கும் உங்களுக்கு துணையாக இருப்பார்.அனைத்து தரப்பு மக்களும் பயன்பெற்றிடும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நல்லாட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்.அதிலும் குறிப்பாக விளையாட்டு வீரர்கள் நலனில் தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்காக பல்வேறு சீர்மிகு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.இவ்வாறு அவர் பேசினார்.முன்னதாக அமைச்சர்கள் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்,பி.மூர்த்தி,மாவட்டச் செயலாளர்கள் சேடபட்டி மு.மணிமாறன், கோ.தளபதி எம்.எல்.ஏ.,ஆகியோர் உரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மதுரை தெற்கு மாவட்ட துணைச் செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ.,லதா அதியமான் ,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மதன்குமார், மதுரை மண்டல தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பாசபிரபு,திருமங்கலம் நகர கழகச் செயலாளர் மு.சி.சோ.பா.ஸ்ரீதர், திருமங்கலம் நகர் மன்ற தலைவர் மு.ரம்யாமுத்துக்குமார்,நகர் மன்ற துணைத் தலைவர் அ.ஆதவன் அதியமான்,நகர் இளைஞரணி செயலாளர் இரா.முத்துக்குமார் மற்றும் மதுரை வடக்கு,மதுரை தெற்கு மற்றும் மதுரை மாநகர் மாவட்ட கழகம்,மாநில அணி நிர்வாகிகள்,மாவட்ட அணி அமைப்பாளர்கள்,நகர,ஒன்றிய,பேரூர்,பகுதி,வார்டு கழக நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பெற்ற தாயின் ஆசையை நிறைவேற்றி வரும் மகன்: இருசக்கர வாகனத்தில் ஆன்மீக சுற்றுப்பயணம்

**ராமேஸ்வரம், டிச.3:**



மைசூர் பகுதிலிருந்து புறப்பட்டு பல ஆயிரம் கிலோ மீட்டர் தொலை தூரத்தில் தந்தை பயன்படுத்திய இருசக்கர் வாகனமான ஸ்கூட்டரில் பயணித்து பெற்ற தாயின் ஆசையான ஆன்மிக சுற்றுபயணத்தை நிறைவேற்றிய பாசக்கார பிரமச்சாரி மகன் 33 மாதங்களுக்கு பிறகு நேற்று ராமேஸ்வரம் ராமநாதசாமி திருக்கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்தனர் .

கர்நாடக மாநிலம் மைசூரு ( மாவட்டம் ) நகரை ஒட்டிய போகாதி பகுதியை சேர்ந்தவர் கிருஷ்ன குமார் . இவரது தாய் ரத்னம்மா ( வயது 70 ) . கிருஷ்ண குமார் பெங்களூருவில் உள்ள ஒரு தனியார் கார்பிரட் நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வந்தார். இந்த நிலையில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணகுமாரின் தந்தை இறந்துவிட் டார் . இதனால் அவரது தாய் ரத்னம்மா , தந்தை இறந்து விட்டதால் தனிமையை உணருவதாக கிருஷ்ணகுமாரிடம் கூறியுள்ளார் . மேலும் தான் இது வரை எந்த கோவிலுக்கும் சுற்றுலா தளத்திற்கும் செல்லவில்லை தந்தை தந்தை மற்றும் உறவினர்களின் சந்தோஷமாக கூட்டு குடும்பமாக இருந்ததால் வீட்டு வேலையை கவனித்து அவர்களை மகிழ்ச்சி படுத்துவதில் எனது வாழ்க்கை காலம் கடந்து விட்டது இப்பொழுது தந்தையும் இல்லை அதனால் என்னை ஆன்மீக சுற்றுப்பயணம் ஆக இந்தியா முழுவதும் உள்ள புண்ணிய ஸ்தலத்திற்கும் மற்றும் சுற்றுலா தளத்திற்கு அழைத்துச் செல்லுமாறு மகனிடம் ஆசையை தெரிவித்துள்ளார்

இதை தாயிடமிருந்து கேட்ட கிருஷ்ணகுமார் சேர்த்து வைத்த பணத்தை வங்கியில் இருப்புத் தொகையாக வைத்து அதன் மூலம் வரும் வட்டி வருவாய் செலவில் இந்தியா முழுவதும் ஆன்மிக ஸ்தலங்களுக்கு 70 வயது தாயை அழைத்து சென்று பயணிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பயணத்தை துவங்கியுள்ளார்.

மைசூரில் புறப்பட்டு கேரளா மாநிலம் வந்து அங்கு பல புனித ஸ்தலங்கள்,வரலாற்று சிறப்பு வாய்ந்த சுற்று பகுதிகள் பாரவையிட்டு திருவனந்தபுரம் பகுதியில் பேலஸ் மற்றும. கன்னியாகுமாரியில் திருவள்ளூவர் சிலை பார்வையிட்டு நாகர்கோவில், திருநெல்வேலி, செங்கோட்டை, தென்காசி ஆகிய பகுதிகளில் சென்று முக்கிய ஸ்தலங்கள் மற்றும் சுற்றுலா பகுதிகளை பார்வையிட்டார்.அதன்பின்னர் சங்கரன்கோவில் ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் விருதுநகர் வழியாக ராமேஸ்வரத்திற்கு நேற்று மாலை வருகை தந்தார்.

இங்கு ராமேஸ்வரம் சன்னதி தெருவில் அமைந்துள்ள குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த பஜ்ரங்கத்தாஸ் பாவா அன்ன நட்சத்திரத்தில் வருகை தந்து ஓய்வு எடுத்தார்.பின்னர் மாலை ராமநாதசாமி திருக்கோவிலுக்கு சென்று அங்கு நடைபெற்ற சிறப்பு பூஜை மற்றும் சிறப்பு அபிஷேகங்கள் தீபாராதனை வழிபாட்டில் கலந்து கொண்டு தாயுடன் சாமி தரிசனம் செய்தார். பின்னர் இரவு பாபா மடத்தில் ஓய்வு எடுத்தார்.

அதன் பின்னர் நேற்று காலையில் ராமநாதசாமி திருக்கோவில் நடைபெற்ற ஸ்படிகலிங்க பூஜையில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்.பின்னர் தாயுடன் கலை 8 மணிக்கு ஸ்கூட்டரில் புறப்பட்டு தனுஷ் கோடி பகுதியை பார்வையிட சென்றார்.தொடர்ந்து ராமேஸ்வரம் பகுதியில் உள்ள திருக்கோயிலின் உபக கோவிலான கோதண்டராமர் கோவில், ராமர் பாதம், லக்ஷ்மண தீர்த்தம், ராம தீர்த்தம் ஆகிய பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டார். பின்னர் பாபா மடத்தில் ஓய்வுக்கு பின் இன்று காலையில் புறப்பட்டு அப்துல் கலாம் சமாதி மற்றும் குந்து கால் பகுதியில் உள்ள விவேகானந்த மணி மண்டபம் மற்றும் பாம்பன் பாலம் ஆகிய பகுதிகளை பார்வையிட்டு புறப்பட்டு சென்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தரிசனம் செய்துவிட்டு அதன் பின்னர் தன் சொந்த ஊரான மைசூரில் உள்ள வீட்டிற்கு சென்று தன் ஆன்மீகப் பயணத்தை நிறைவு பெற திட்டமிட்டுள்ளார்.

# அலங்காநல்லூரில் பேருந்து மோதி முதியவர் பலி

**அலங்காநல்லூர், டிச, 3**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள தண்டலை பகுதியைச் சேர்ந்தவர் தங்கவேலு (எ)கோடாங்கி (75). இன்று காலை தண்டலையிலிருந்து அலங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்கு வந்துள்ளார்.

பேருந்து நிலையப் பகுதியில் நடந்து செல்லும் பொழுது அலங்காநல்லூரில் இருந்து நத்தம் நோக்கி புறப்பட்ட அரசு பேருந்து எதிர்பாராதவிதமாக மோதியதில் தங்கவேலு உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பலியானார். இதுகுறித்து அலங்காநல்லூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக விரைந்து வந்த சார்பு ஆய்வாளர் மருதமுத்து மற்றும் போலீசார் தங்கவேலு உடலை கைப்பற்றி வாடிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விபத்து குறித்து விசாரணை செய்து வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# குத்திலிப்பையில்கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் சிறப்பு கால்நடை நோய் தடுப்பு விழிப்புணர்வு முகாம்



**ஒட்டன்சத்திரம்.டிச.03**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியம் குத்திலிப்பை ஊராட்சியில் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை பழனி கோட்டம் சார்பாக சிறப்பு கால்நடை நோய் தடுப்பு மற்றும் சுகாதாரம் விழிப்புணர்வு

முகாம் ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி ராஜா தலைமையில் நடைபெற்றது. உதவி இயக்குனர் சுரேஷ் முன்னிலை வகித்தார். இதில் கால்நடைகளுக்கு சீதோசன மாற்றத்தால் ஏற்படும் பருவ கால நோய்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு கால்நடைகளுக்கு தடுப்பூசி குடல் புழு நீக்கம், கருவூட்டல், கால்நடைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு, சிறந்த கால்நடை வளர்ப்போருக்கு விருதும் சான்றிதழும் வழங்கப்பட்டது .

நிகழ்வில் கால்நடை உதவி மருத்துவர்கள் ஆனந்தன், மணிகண்டன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கால்நடை மருத்துவ பணியாளர்கள் கலந்து கொண்டனர் .

# பாலமேடு அருகே ஓடையில் மூழ்கி மாணவன் பலி

**பாலமேடு,டிச-3**

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள முடுவார்பட்டியை சேர்ந்தவர் ஆனந்தராஜா(32). கூலி வேலை. மனைவி அண்ணகாமு (27). இவர்களுக்கு ஒரு மகள் மற்றும் இரண்டு மகன்கள் உள்ளனர். இரண்டாவது மகனான கிருத்திக்ரக் ஷன் (8) மூன்றாம் வகுப்பு படித்து வருகிறார். இவர் நேற்று மாலை வீட்டிற்கு தெரியாமல் நண்பர்களுடன் அதே பகுதியில் உள்ள ஓடையில் குளிக்கச் சென்றுள்ளார் அப்பொழுது எதிர்பாராத விதமாக கிருத்திக்ரக் ஷன் தண்ணீருக்குள் மூழ்கி உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து அலங்காநல்லூர் தீயணைப்புத் துறை தகவல் தெரிவிக்கப்பட்டது.உடனடியாக விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் கிருத்திக் ரக் ஷன் உடலை மீட்டு உடற்கூற் ஆய்விற்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் தொடர்பாக பாலமேடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றார்.

# நத்தம் அருகே கரந்தமலை அருவியில் ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீர்



**நத்தம், டிச,3**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே உள்ளது குட்டுப்பட்டி கிராமம் இங்கிருந்து மலை உச்சியில் மலையூர், பள்ளத்துக்காடு, வலசு உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன. இந்த மலைகிராமங்களுக்கு செல்லும் வழியில் உள்ளது கரந்தமலை அருவி.இங்கு தற்போது பெய்த மழையினால் அருவியில் தண்ணீர்வரத்து அதிகரித்து ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் மேலும் உள்ளூர் கிராமவாசிகளும் அருவியில் குளித்து மகிழ்கின்றனர். இந்த அருவியானது நத்தத்தில் இருந்து செந்துறை செல்லும் சாலையில் குட்டுப்பட்டி கிராமத்தில் இருந்து 5 கி.மீ தொலைவில் மலை உச்சியில் அமைந்துள்ளது.

மதுரை மங்கையர்கரசி பொறியியல் கல்லூரியில்

# அக்ரோ கான்கிளேவ் 2022 கருத்தரங்கம் செயலர் அசோக்குமார் தலைமையில் நடந்தது




**மதுரை, டிச 03-**

மதுரை மங்கையர்கரசி பொறியியில் கல்லூரியில் அக்ரோ கான்கிளேவ் 2022 கருத்தரங்கம் செயலர் அசோக்குமார் தலைமையிலும், இயக்குனர் சக்திபிரனேஷ் முன்னிலையிலும் நடைபெற்றது.

மதுரை மங்கையர்கரசி பொறியியல் கல்லூரி மற்றும் கிரேட் மிஷன் குரூப் கன்சல்டன்சி பூனே இணைந்து அக்ரோ கான்கிளேவ் 2022 என்ற தலைப்பில் கருத்தரங்கம் கல்லூரி செயலர் டாக்டர் அசோக்குமார், இயக்குனர் சக்திபிரனேஷ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியரும், வழக்கறிஞருமான கணேஷ்ஹிங்மிரே, புகழ்பெற்ற மருத்துவர் முகுந்சங்கர்நேர்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் அறிவுசார் சொத்துரிமைகள், புவியியல் சார்ந்த குறியீடுகள் மற்றும் விவசாய சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இவை எவ்வாறு உதவுகின்றன என்பதை பற்றியும் விவசாயம் மூலமாக மருந்தில்லாமல் வாழ்வது எப்படி என்பதைப்பற்றியும் சிறப்பு விருந்தினர்கள் சொற்பொழியாற்றினார்கள். மேலும் விழாவின் சிறப்பம்சமாக காப்புரிமை மற்றும் புவியியல் சார்குறியீடு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் மங்கையர்கரசி பொறியியல் கல்லூரியின் விவசாய பொறியியில் துறையுடன் கையெழுத்திடப்பட்டது. இது விவசாய பொறியியல் மாணவர்களுக்கும், விவசாயிகளுக்கும் பெரிதளவில் நன்மைபயக்கும். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை முதல்வர் டாக்டக் கார்த்திகேயன் மற்றும் வேளாண் பொறியியில் துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

## திருவண்ணாமலையில்
# தீபவிழா 6ம் நாள் உற்சவம் வெள்ளி தேரோட்டம்: ஏராளமான பக்தர்கள் தரிசனம்



**திருவண்ணாமலை, டிச.3-**
திருவண்ணாமலையில் தீபத்திருவிழா உற்சவத் தின் 6ம் நாளான நேற்று இரவு வெள்ளி தேரோட்டம் நடைபெற்றது. இதில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 27ம்தேதி தொடங்கி சிறப்பாக நடந்து வருகிறது. தினமும் காலையிலும் இரவிலும் சுவாமிகள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி மாடவீதிகளில் பவனி வருகின்றனர். மகாதீபபெருவிழாவுக்கு இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில், திருவண்ணாமலை நகரம் விழாக்கோலமாக காட்சியளிக்கிறது. தினசரி காலை, இரவு என உற்சவ மூர்த்திகள் பவனி வருகின்றனர். அதன்படி தீபத் திருவிழாவின் 5ம் நாள் உற்சவமான வியாழனன்று இரவு திருக்கல்யாண மண்டபத்தில் ராஜகோபுரம் எதிரில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளினர். வண்ண மின்விளக்கு அலங்காரம் மற்றும் மலர் அலங்காரம் செய்யப்பட்ட வெள்ளி ரிஷப வாகனத்தில் விநாயகரும், வெள்ளி மயில் வாகனத்தில் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியரும், வெள்ளி பெரிய ரிஷப வாகனத்தில் உண்ணாமுலையம்மன் உடனாகிய அண்ணாமலையாரும், வெள்ளி ரிஷப வாகனத்தில் பராசக்தி அம்மனும், வெள்ளி ரிஷப வாகனத்தில் சண்டிகேஸ்வரரும் எழுந்தருளி மாடவீதியில் பவனி வந்தனர்.இந்நிலையில் உற்சவத்தின் 6ம் நாளான நேற்று காலை, மூஷிகவாகனத்தில் விநாயகர், வெள்ளியானை வாகனத்தில் சந்திரசேகரர் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி மாடவீதிகளில் பவனி வந்தனர். அப்போது அங்கு திரண்டிருந்த பக்தர்கள் 'அண்ணாமலையாருக்கு அரோகா' என பக்தியுடன் தரிசனம் செய்தனர். தொடர்ந்து தனித்தனி விமானங்களில் 63 நாயன்மார்கள் மாட வீதியுலாவும் நடந்தது. அதனைத் தொடர்ந்து மாலையில் கோவிலில் சமய சொற்பொழிவும், கலையரங்கில பரதநாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.தொடர்ந்து இரவு வெள்ளித் தேரோட்டம் நடைபெற்ற. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மாடவீதியில் திரண்டிருந்து கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் விடிய விடிய சுவாமி தரிசனம் செய்தனர்.வெள்ளி விமானத்தில் விநாயகர், வெள்ளி ஆச்சி விமானத்தில் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், வெள்ளி தேரில் உண்ணாமுலையம்மன் சமேத அண்ணாமலையார், வெள்ளி இந்திர விமானத்தில் பராசக்தி அம்மன், வெள்ளி விமானத்தில் சண்டிகேஸ்வரர் பவனி வந்தனர்.



**செங்கம் தொகுதி தண்டராம்பட்டு ஒன்றியத்தில் வட்டார அளவிலான கலைத் திருவிழாவினை மு.பெ.கிரி எம்.எல்.ஏ குத்துவிளக்கு ஏற்றி தொடங்கிவைத்து பேசினார். உதவி தொடக்க கல்வி அலுவலர் செல்வம், ஒன்றியக்குழு தலைவர் பரிமளா கலையரசன், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.**

## செங்கத்தில்
# 11ம் நூற்றாண்டு கோயில் தூண் கண்டுபிடிப்பு



**செங்கம் டிச.3**
செங்கம் சங்ககாலப் புகழ் பெற்ற ஊராகும். பத்துப்பாட்டு தொகை நூலின் பத்தாவதான மலைபடுகடாம் என்கிற கூத்தர் ஆற்றுப்படை செங்கத்தைப் பற்றி பாடப்பட்டதாகும். செங்கம் செய்யாற்றின் கரையில் நன்னன் கோட்டை மேடு எனும் பகுதியில் 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த சுமார் ஆயிரம் ஆண்டு காலபழமையான இரண்டாக உடைந்த சுமார் 8அடி உயர கல்வெட்டுடன் கூடிய கல் தூண் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதை கண்டறிந்த செங்கண்மா வரலாற்று ஆய்வு நடுவன் தலைவர் பிரேம் ஆனந்த் இதுபற்றி தெரிவித்ததாவது இந்த கல்வெட்டு தூணில் விஷ்ணு கோயிலில் நந்தா விளக்கு எரிக்க வரியை தானமாக பெற்றதான விபரம் தெறிய வருகிறது.

விண்ணகரம் என்ற வார்த்தை மூலம் சோழர் காலத்தைச் சேர்ந்த சுமார் பத்தாம் நூற்றாண்டு தூண் என தெரிய வருகிறது. ஏற்கனவே இப்பகுதி அகழ் வாராய்ச்சியில் கோட்டைக்கு தண்ணீர் வரும் அகழி மதில்கள் இருந்த அடையாளம் அகழி இருந்த அடையாளம் சிவ லிங்கம் போன்றவை கண்டறியப்பட்டது.

நன்னன் கோட்டை மேடு எனும் இப்பகுதியை முழுமையாக ஆய்வு செய்தால் செங்கத்தின் சங்க கால தொன்மையான வரலாறு ஆவணங்கள் தடங்கள் பல கிடைக்கும் என செங்கன்மா வரலாற்று ஆய்வு நடுவன் தலைவர் பிரேம் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் முதல்முறையாக
# அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நடமாடும் கண்காணிப்பு வாகனம்
## டி.ஜி.பி. சைலேந்திரபாபு கொடியசைத்து தொங்கி வைத்தார்



**வேலூர், டிச.3**
வேலூர் மாநகராட்சி சார்பில் ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் அதி நவீன கண்காணிப்பு வாகனத்தை காவல் துறை தலைவர் சைலேந்திர பாபு கொடியாசித்தி தொடங்கி வைத்து பின்னர் செய்தியாளர்களிடம் கூறிய தாவது

வேலூர்மாவட்டம், வேலூரில் மாநகராட்சியின் சார்பில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் நவீன கேமராக்கள் ஒரு வாகனத்தில் பொருத்தப்பட்டு மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் இந்த வாகனம் செல்லும் போது துள்ளியமாக திருடர்களின் முகங்களை கண்காணிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது சுமார் ரூ.56 லட்சம் செலவில் வடிவமைக்கப்பட்ட இந்த ஊர்தி தமிழகத்தில் மிகவும் நவீன தொழில்நுட்பத்துடன் நடமாடும் ஊர்தியாகும் .மாநகராட்சி சார்பில் இதனை ஒப்படைக்கும் நிகழ்சிக்கு முன்னதாக மேயர் சுஜாதா, சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், ஆகியோர் இந்த வாகனத்திற்கு பூஜை போட்டு பின்னர் அதனை கொண்டு வந்து வேலூர் வடக்கு காவல்நிலையத்தில் தமிழக காவல் துறை தலைவர் சைலேந்திர பாபுவிடம் ஒப்படைத்தனர். இதில் மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் . மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ் கண்ணாவும் கலந்துகொண்டனர். இந்த நவீன வாகனத்தில் உள்ள கேமராக்களின் மூலம் துள்ளியமாக அனைத்தையும் கண்டறியும் அதிசக்தி வாய்ந்த 6 நவீன சிசிடிவி கேமராக்கள், மற்றும் செயற்கைக்கோள் இணைப்புகளுடன் கூடிய அனைத்து நவீன கண்காணிப்பு அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. முதலாவது அந்த வாகனம் திருவண்ணாமலை தீபத்திருவிழாவை கண்காணிக்க அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் தமிழக காவல்துறை தலைவர் சைலேந்திரபாபு செய்தியாளர்களிடம் கூறுகையில், நடமாடும் இந்த கண்காணிப்பு ஊர்தி துள்ளியமான வகையில் நவீன கேமராக்களை பொருத்தப்பட்டுள்ளது . இதன் மூலம் குற்றவாளிகள் சிக்குவார்கள் திருவண்ணாமலை தீபத்திற்காக அனுப்பப்படுகிறது. தமிழ்நாட்டில் போதை பொருட்கள் தடுப்பு ஓரளவு எல்லா மாவட்டங்களிலும் சிறப்பாக தடுக்கப்பட்டு வருகிறது .சில மாவட்டங்களில் இன்னும் தடுக்கபட வேண்டியுள்ளது தமிழக காவல்துறை எல்லா வகையிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. பாஜக தலைவர் அண்ணாமலை குறித்து கேட்ட போது அவர் பதில் சொல்லாமல் தவிர்த்துவிட்டார் .தமிழகத்தில் சுமார் 48,000 இணைய வழி குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழகத்தில் காவல்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் கஞ்சா மற்றும் போதை பொருள் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் ரம்மி ஒழிப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . இது தொடர்பாக பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும், தமிழகத்தில் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் சைலேந்திரபாபு கூறினார்.

## கற்பூரம், பட்டாசு கொண்டு செல்ல தடை
# காலை 6 மணி முதல் பகல் 2 மணி வரை 2500 பக்தர்கள் மட்டுமே மலையேற அனுமதி
## கலெக்டர் பா.முருகேஷ் அறிவிப்பு

**திருவண்ணாமலை, டிச.3-**
திருவண்ணாமலை தீபத் திருவிழாவுக்கு வரும் பக்தர்கள் கற்பூரம், பட்டாசு கொண்டு வரக்கூடாது. மேலும் மகாதீபத்தன்று காலை 6 மணி முதல் பகல் 2 மணி வரை 2500 பக்தர்கள் மட்டுமே மலையில் ஏற அனுமதிக்கப்படுவார்கள் என கலெக்டர் பா.முருகேஷ் தெரிவித்தார்.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் வரும் 6ம்தேதி மகாதீப திருவிழா நடைபெறுகிறது. அன்று அண்ணாமலையார் மலைமீது ஏறும் பக்தர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை திருவண்ணாமலை கலெக்டர் பாமுருகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி, தீபத்திருநாளான வரும் 6ம்தேதி அன்று 2,500 பக்தர்கள் மட்டும் அண்ணாமலையார் மலை மீது ஏற நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படுகிறது. அன்று காலை 6 மணி முதல் முதலில் வரும் 2,500 பக்தர்களுக்கு மட்டுமே மலை ஏற அனுமதிக்கப்படுவார்கள். இதற்காக அன்றைய தினம் காலை 6 மணிக்கு திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசுக்கலை கல்லூரி வளாகத்தில் சிறப்பு மையம் திறக்கப்பட்டு 2,500 பக்தர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அனுமதி சீட்டு வழங்கப்படும். மலை ஏற அனுமதி கோரும் பக்தர்கள் தங்களது ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை மற்றும் பிற இதர அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலினை சமர்ப்பித்து அனுமதி சீட்டு பெற்றுக்கொள்ளலாம். பக்தர்கள் பேகோபுரம் அருகில் உள்ள வழியில் மட்டுமே மலை ஏற அனுமதிக்கப்படுவார்கள். மற்ற வழிகளில் மலை ஏற கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டாது. 6ம்தேதி பிற்பகல் 2 மணி வரை மட்டுமே பக்தர்கள் மலை ஏற அனுமதிக்கப்படுவார்கள். மலை ஏறும் பக்தர்கள் தண்ணீர் பாட்டில் மட்டுமே எடுத்து செல்லவேண்டும். காலி தண்ணீர் பாட்டில்களை மலையிலிருந்து இறங்கி வரும்போது திரும்ப கொண்டு வர வேண்டும். மலை ஏறும் பக்தர்கள் கற்பூரம், பட்டாசு மற்றும் எளிதில் தீப்பிடிக்க கூடிய பொருட்களை கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

மலை ஏறும் பக்தர்கள் கொண்டு செல்லும் நெய்யினை அனுமதிக்கப்பட்ட கொப்பரையில் மட்டுமே ஊற்றவேண்டும், வேறு எந்த இடத்திலும் நெய்யினை ஊற்றவோ, நெய் தீபம் ஏற்றவோ கூடாது. மேற்கண்ட நிபந்தனைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலை வேளாண்மை இணை இயக்குனராக சி.ஹரக்குமார் பொறுப்பேற்பு



**திருவண்ணாமலை. டிச.3 -**
திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனராக இருந்த பாலா, திருப்பத்தூர் மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டார். அதற்கு பதில் வேளாண்மை துணை இயக்குனராக இருந்த சி.ஹரக்குமார் பதவி உயர்வு பெற்று திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனராக நேற்று பொறுப்பேற்றுக் ஏற்றுக்கொண்டார்.

அவருக்கு வேளாண்மை அலுவலர்கள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். புதிய வேளாண்மை இணை இயக்குனர் சி.ஹரக்குமார் செய்தியாளர்களிடம் கூறுகையில், பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான கவுரவ நிதி திட்டத்தில் பதிவு செய்துள்ள தகுதியான விவசாயிகள் அந்த நிதியை தொடர்ந்து பெறுவதற்கு தங்களது ஆதார் எண்ணுடன், வங்கி கணக்கு மற்றும் செல்போன் எண்ணை வருகிற 30-ஆம் தேதிக்குள் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், குறைந்த செலவில் அதிக லாபம் தரும் எள் பயிரை திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயிகள் அதிக அளவில் பயிரிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# கிரிவலம் வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் பணி
## ஒன்றிய ஆணையாளர்கள் மேற்பார்வையில் நடந்தது

**திருவண்ணாமலை. டிச.3-**
திருவண்ணாமலையில் கிரிவலம் வரும் பக்தர்களுக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மேற்பார்வையில் அடிப்படை வசதிகளை செய்து தரும்பணி நடைபெற்றது.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் கார்த்திகை தீப திருவிழா கடந்த 27ந் தேதி முதல் கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. இன்று பஞ்ச மூர்த்திகள் தேரோட்டம் நடைபெறுகிறது. இதைக் காண சுமார் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் கலெக்டர் பா.முருகேஷ் உத்தரவின் பேரில் கிரிவலம் வரும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. கிரிவல பாதையின் தொடக்கத்தில் உள்ள ஆணாய்பிறந்தான் ஊராட்சியில் பக்தர்களுக்கான ஓய்வு அறை, கழிவறை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரும் பணியும், துப்புரவு பணியாளர்களை கொண்டு தூய்மை செய்யும் பணியும் நடைபெற்று வருகிறது.

இப்பணிகளை அப்பகுதி பொறுப்பாளர்களும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுமான கே.பி. மகாதேவன் (தண்டராம்பட்டு), பி.பி.முருகன் (புதுப்பாளையம்) ஆகியோர் பார்வையிட்டனர். அப்போது ஆணாய் பிறந்தான் ஊராட்சி மன்ற தலைவர் கே.தருமராஜ் உடன் இருந்தார்.

### வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி கோயில்
### மஹா கும்பாபிஷேக விழா: கோ பூஜையுடன் நாளை துவக்கம்



**அரக்கோணம் டிச.3**
ராணிபேட்டை மாவட்டம், அரக்கோணம் நகரம், தர்மராஜா கோவில் அருகில் அருள்மிகு வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருப்புகழ் திருஅருட்பா சபை சார்பில் நாளை 4ந்தேதி மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. இதனை முன்னிட்டு நேற்று காலை கணபதி ஹோமம், நவகிரஹ ஹோமம், லட்சுமி ஹோமம் மற்றும் கோ பூஜையும் நடைபெற்றது. இந்த பூஜையில் ஹரிகரன் பாரதி, பன்னீர்செல்வம் வாழவந்தாள், வெங்கடேசன் கோமதி, பழனி கோகிலா, அரி பிரசாத் சரண்யா ஆகிய தம்பதியர்கள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை விழா கமிட்டி தலைவர் எம். தேவராஜ் மற்றும் பார்த்தசாரதி, லிங்கம், ஜெயக்குமார் மற்றும் எம்.பி. சோமசுந்தரம் ஆகியோர் சுறுப்பட்டனர்.

# மேற்கு ஆரணி ஒன்றிய குழு கூட்டம்

**ஆரணி டிச 3:**
மேற்கு ஆரணி ஒன்றிய குழு கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு ஒன்றிய குழு தலைவர் பச்சையம்மாள் சீனிவாசன் தலைமை தாங்கினார். ஒன்றியக்குழு துணைத்தலைவர் அ.வேலாயுதம், வட்டார வளர்ச்சி அலுவலர் திலகவதி, கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் சவீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் ஒன்றியக்குழு உறுப்பினர் சா.ஏழுமலை: அதிக அளவில் பேப்பர், எழுதுபொருட்கள், வாங்கியதாக செலவுத்தொகை தீர்மானம் வைக்கிறீர்கள், பள்ளியில் கழிவறை சுத்தம் செய்ய சம்பளம் தருகிறீர்கள் எங்கள் பகுதி பள்ளியில் கழிவறை சுத்தம் செய்ய ஆட்கள் இல்லை அப்படி இருக்க யாருக்கு அந்தப் பணம் செல்கிறது. ஏன்றார். வட்டார வளர்ச்சி அலுவலர் திலகவதி: எழுதுபொருட்கள் செலவு குறித்து மாதம் முடிந்ததும் தெரியவரும் அலுவலகத்திற்கு தேவையானதை தான் வாங்குகிறோம், கழிவறை சுத்தம் செய்வதற்கு சம்பளம் ஒன்றிய நிதியிலிருந்து வழங்க மாவட்ட அலுவலகத்தில் இருந்து உத்தரவு வந்ததால்தான் பணம் தரப்படுகிறது பணியாட்களை பள்ளியின் கல்வி குழு தலைவர் தேர்வு செய்து சம்பளம் தருவார் என்றார்.ஒன்றியக் குழு உறுப்பினர் குமாரராஜா: ஊராட்சிகளுக்கு தேசிய கொடி வாங்கிய செலவிற்கு ஒன்றியக்குழுவில் ஏன் தீர்மானம் வைக்கின்றீர்கள், மேலும் ஊராட்சிகளில் செடி, வளர்க்க செலவுத் தொகை ஒன்றிய குழுவில் தீர்மானம் ஏன் வைக்கிறார்கள் என்றார்.வட்டார வளர்ச்சி அலுவலர் திலகவதி: தேசிய கொடி ஒன்றிய நிதியில் கொள்முதல் செய்து ஊராட்சிகளுக்கு தரப் வேண்டும் பின்னர் ஊராட்சி நிதியிலிருந்து ஒன்றிய நிதிக்கு பணம் திரும்ப வந்துவிடும் ஒரு லட்சத்து 96 ஆயிரத்து 326 ரூபாய் செலவானதில் இதுவரை 72300 ரூபாய் திரும்ப வந்துள்ளது மீதி தொகை இம்மாதம் வந்து விடும். செடிவளர்த்தல் ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் செயல்படுவது ஆகையால் ஊராட்சி தான் அப்பணிகளை செய்ய முடியும் என்றார்.மேலும் பல்வேறு ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஊராட்சி தலைவர்கள் எங்களிடம் கலந்தாலோசிப்பதில்லை அப்படி இருக்க ஊராட்சி பணிகளுக்கு ஒன்றியக்குழுவில் தீர்மானம் ஏன்வைக்கின்றீர்கள் என்று எதிர்ப்பு தெரிவித்தனர். மன்ற கூட்டத்தில் மைக் ஸ்பீக்கர் வைக்கவும் பேசுவது கேட்கவில்லை என்றனர்.ஒன்றியக்குழு உறுப்பினர்கள் கீதா மோகன், அரையாளம் எம்.வேலு, பகுத்தறிவு மாமது, நாகேஸ்வரி கோபு, கே.ஏழுமலை, ஜெ.கணேசன் உள்ளிட்டோர் தங்கள் பகுதி கோரிக்கைகளை கேட்டனர்.


**செங்கம் தேர்வுநிலை பேரூராட்சி**
**திருவண்ணாமலை மாவட்டம்**

ந.க.எண் 445/2022/அ1 நாள் : 30.11.2022

உள்ளாட்சிதுறை அறிவிக்கை
திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத பேரூராட்சி
**Open Defecation Free+பிரகடனப்படுத்துதல்**

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் (SBM) செங்கம் பேரூராட்சியில் 100 சதவிகிதம் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத பேரூராட்சியாக பிரகடனப்படுத்த செங்கம் பேரூராட்சியில் மொத்தம் உள்ள 18 வார்டுகளிலும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத பேரூராட்சியாக (ODF+) தூய்மையான பகுதியாக செங்கம் பேரூராட்சியை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இது குறித்த பொதுமக்களிடமிருந்து கருத்து மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 15 தினங்களுக்குள் செங்கம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு எழுத்து வடிவில் தகவல் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒம்/-) ஹா.சாதிக்பாஷா, தலைவர், செங்கம் சிறப்புநிலை பேரூராட்சி திருவண்ணாமலை மாவட்டம்

(ஒம்/-) ச.லோகநாதன், செயல் அலுவலர், செங்கம் சிறப்புநிலை பேரூராட்சி திருவண்ணாமலை மாவட்டம்

வெ.ஆ.எண்:251/செமதொ.அ/2022/திமலை நாள் : 02.12.2022
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்" "சாதனைபுரிந்து சரித்திரம் படைப்போம்"

**பொது அறிவிப்பு**
ராணிபேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், கீழ்குப்பம் கிராமம், நெ 517- அன்னை முகாம்பிகை நகர், முகவரியில் வசிக்கும் ஜெய்குமார் ஆகிய நான் எனக்கு சொந்தமான பொது அதிகார ஆவணம் எண்-106/2022, இந்த ஆவணத்தை எடுத்துக் கொண்டு கடந்த 08-07-2022 அன்று அரக்கோணம் புதிய பஸ் நிலையம் அருகில் சென்ற போது அங்கு தொலைந்து போனது. அதனை எங்கு தேடியும் கிடைக்கவில்லை எனவே, ஆவணம் யாரிடமாவது கிடைத்தால் மேற்படி முகவரியில் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்..
இப்படிக்கு: ஜெய்குமார்.

**பொது அறிவிப்பு**
ராணிபேட்டை மாவட்டம், அரக்கோணம் நகரம், சுவால் பேட்டை, நெ 38- டவுன்ஹால் 3வது தெரு முகவரியில் வசிக்கும் சின்னப்பா மகன் சண்முகம் ஆகிய நான் எனக்கு சொந்தமான விற்பனை அசல் ஆவணம் எண் -1/240/1993, இந்த ஆவணத்தை எடுத்துக் கொண்டு கடந்த 15-10-2022 அன்று அரக்கோணம் அரசு பெண்கள் மேனிலை பள்ளி அருகில் சென்ற போது அங்கு தொலைந்து போனது. அதனை எங்கு தேடியும் கிடைக்கவில்லை எனவே, ஆவணம் யாரிடமாவது கிடைத்தால் மேற்படி முகவரியில் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்..
இப்படிக்கு: C.சண்முகம். 9442308705

**பொது அறிவிப்பு**
ராணிபேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், உரியூர் அஞ்சல், உரியூர் குப்பம், நெ 218-ஆரோக்கிய மாதா தெரு முகவரியில் வசிக்கும் அருளப்பன் மகன் லூர்துசாமி. ஆகிய நான் எனக்கு சொந்தமான விற்பனை ஆவணங்கள் எண்-2356/2005, 4172/2020, இதனை எடுத்து கொண்டு கடந்த 11-11-2022 அன்று அரக்கோணம் மார்கெட்டிற்கு கொண்டு சென்ற போது அங்கு தொலைந்து போனது. பல இடங்களில் தேடியும் அவைகள் கிடைக்கவில்லை. எனவே, ஆவணம் யாரிடமாவது கிடைத்தால் மேற்படி முகவரியில் தருமாறு கேட்டுக் கொள் கிறேன்..
இப்படிக்கு: A.லூர்துசாமி. 99656 84105

**DOCUMENT MISSING**
R.PAZHANI S/o RAMASAMY
93, Kaladavi villege, Elanguni Post,
chengam Taluk, Thiruvannamalai Dist.
Pin - 606 703. cell : 9176207844
INFORMATION
we are living in the above address. On 09.09.2022 Our Document has been missed at Near Co-op Socity, Neeppatturai Village Document Number : 515/1982 This Document, if any one can find that Document contact to Melchengam Police Station and this Cell Number 9176207844
R.PAZHANI Kalladavi villege

**INFORMATION**
M.BABU S/o MANNU CHETTIYAR
53, Sivan Kovil Street,
chengam Town & Taluk - 606 701
Thiruvannamalai Dist.
Cell : 9842099388
INFORMATION
My Father MANNU CHETTIYAR, and he is died on 16.08.2008 in My above Native Place. His Name is mentioned in my pass port MUNNU CHETTIYAR . His Name is not MUNNU CHETTIYAR . Originaly his Name is Called for MANNU CHETTIYAR
M.BABU Chengam

மாண்புமிகு வருவாய் கோட்டாச்சியர், அவர்கள், அரக்கோணம்
தர்மதுரை த/ பெ கோவிந்தராஜ், நெ.320. டாக்டர் அம்பேத்கர் தெரு, புதிய காலனி, தணிகைபோளுர், அரக்கோணம் வட்டம், ராணிபேட்டை மாவட்டம்
........மனுதாரர்
.....எதிர்....
உயர் திரு கோட்டாச்சியர் அவர்கள், கோட்டாச்சியர் அலுவலகம், அரக்கோணம்,
......எதிர்மனுதாரர்
மேலே கண்ட முகவரியில் வசிக்கிறேன். எனக்கும் மனைவி உஷாவிற்கும் மகனாக திலிப்குமார் கடந்த 22-09-2006 அன்று மேலே கண்ட வீட்டு முகவரியில் பிறந்தார் குடும்பத்தார் கவனகுறைவால் எதிர்மனுதாரரிடம் பதிவு செய்ய தவறிவிட்டனா. எனவே. எனது மகனின் பிறப்பை எதிர்மனுதாரர் பதிவு செய்ய உத்தரவு கோரி மனு தாக்கல் செய்கிறேன். எனவே, யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மாண்புமிகு வருவாய் கோட்டாச்சியர் அரக்கோணம் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தெரிவித்து கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒரு தலை பட்சமாக தீர்மானிக்கபட்டு உத்தரவு பெறப்படும் என்பதை அறியவும்
இப்படிக்கு: தர்மதுரை



Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



ஆழ்வார்திருநகரில் மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவ துறையின் சார்பாக ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் மினி கிளினிக் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி காரம்பக்கம் கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் மண்டல குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன். மாமன்ற உறுப்பினர் செல்வி ரமேஷ் பகுதி துணை செயலாளர் வே. மதியழகன், வட்ட செயலாளர் ரமேஷ் மற்றும் பலர் உள்ளனர்.



வடசென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் பகுதி கழக செயலாளர் தி.மு.தனியரசு வரவேற்புரையாற்ற திருவொற்றியூரில் இந்தி எதிர்ப்பு தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் மற்றும் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாநில ஐ.டி. விங் ஆலோசகர் கவிஞர் மனுஷ்யபுத்திரன் ஏழைப் பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் புடவைகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



சென்னை ராயபுரத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநருடைய ஆட்டோவை பழுது பார்க்க உதவிடுமாறு கோரிக்கை வைத்திருந்த அவருக்கு திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ரூ.15 ஆயிரம் வழங்கினார்.



வளசரவாக்கம் மண்டலம் 151 வது வார்டு ராமகிருஷ்ணா பிரதான சாலையில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணி முடிவடைந்ததையொட்டி மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து சாலைகளை சீர் செய்யும் பணியை கவுன்சிலர் ச.சங்கர் கணேஷ் பார்வையிட்டார். உடன் ராமையா, விமலாசேகர், செந்தில்குமார், மற்றும்பலர் உள்ளனர்.

## துபாயில் இருந்து சென்னைக்கு
# வெளிநாட்டு சிகரெட் பாக்கெட்டில் மறைத்து கடத்திய ரூ.21 லட்சம் தங்கம் பறிமுதல்

**சென்னை டிச 3-**

சென்னை விமான நிலையத்தில் ரூ.21 லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள 450 கிராம் தங்கம் மற்றும்ரூ.8 லட்சம் வெளிநாட்டு பணத்தை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்துக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் விமானங்களில் பெரும் அளவில் தங்கம் கடத்தி வரப்படுவதாக விமான நிலைய சுங்க இலாகா முதன்மை கமிஷனர் மேத்யூ ஜோல்லிக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அவரது உத்தரவின்பேரில் சுங்க இலாகா அதிகாரிகள் விமான பயணிகளை தீவிரமாக கண்காணித்தனர். அப்போது துபாயில் இருந்து வந்த விமானத்தில் பயணம் செய்த சென்னையை சேர்ந்த வாலிபரை சந்தேகத்தின்பேரில் நிறுத்தி விசாரித்தனர். அதிகாரிகளிடம் அவர் முன்னுக்குபின் முரணாக பேசியதால் அவரது உடைமைகளை சோதனை செய்தனர். அதில் அவரிடம் வெளிநாட்டு சிகரெட்டுகள் கொண்ட 35 பாக்கெட்டுகள் இருந்தன.

சந் தே கத் தின் பே ரில் அந்த சிகரெட் பாக்கெட்டுகளை பிரித்து பார்த்தபோது அதற்குள் தங்கத்தை மறைத்து வைத்து கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர். அவரிடம் இருந்து ரூ.21 லட்சத்து 20 ஆயிரம் மதிப்புள்ள 450 கிராம் தங்கமும், வெளிநாட்டு சிகரெட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக வாலிபரை கைது செய்த சுங்க இலாகா அதிகாரிகள், அவரிடம் மேலும் விசாரித்து வருகின்றனர்.

சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்தில் இருந்து துபாய் செல்லும் விமானத்தில் ஏற வந்த பயணிகளின் உடைமைகளை சுங்க இலாகா அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது சென்னையைச் சேர்ந்த 25 வயது வாலிபரின் உடைமைகளை சோதனை செய்தனர். அதில் எதுவும் இல்லை. பின்னர் அவரை தனியறைக்கு அழைத்து சென்று சோதனையிட்டனர். அதில் அவர், உள்ளாடைக்குள் கட்டுக்கட்டாக அமெரிக்க டாலர்களை மறைத்து வைத்து கடத்த முயன்றதை கண்டுபிடித்தனர்.

அவரிடம் இருந்து ரூ.8 லட்சத்து 22 ஆயிரம் மதிப்புள்ள அமெரிக்க டாலர்களை பறிமுதல் செய்தனர். மேலும் வாலிபரின் துபாய் விமான பயணத்தை ரத்து செய்தனர்.

அந்த வாலிபரை கைது செய்த சுங்க இலாகா அதிகாரிகள், அவர் அமெரிக்க டாலர்களை எதற்காக கடத்திச் செல்ல முயன்றார்? அது ஹவாலா பணமா? என விசாரித்து வருகின்றனர்.

## திமுக இளைஞரணி சார்பில்
# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி



**ஊத்துக்கோட்டை, டிச-03.**

எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பாக சூளைமேனி பகுதியில் திமுக மாநில இளைஞரணி செயலாளரும் திருவல்லிக்கேணி - சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு எல்லாபுரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பி. ஜெ.மூர்த்தி தலைமையில் வடக்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் டி.சங்கர் ஏற்பாட்டில் ஏழை எளியவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு அரிசி சேலை உள்ளிட்ட நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் உதயசூரியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ், தில்லைகுமார், மோகன்பாபு, ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய துணை அமைப்பாளர்கள் அப்புன், சேகர், அசோக்குமார், தண்டபாணி, ராஜ்குமார், தண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் ரவி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஐ.ஏழுமலை, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.சீனிவாசன் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கடம்பத்தூரில்
# பீனிக்ஸ் நாற்றங்கால் பண்ணை: கலெக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் திறந்து வைத்தார்



**திருவள்ளூர்,டிச.03-**

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் உலக எய்ட்ஸ் தினம் அனுசரிக்கப்படுவதை தொடர்ந்து, எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாகவும் தொழில் ரீதியாக அவர்களை முன்னேற்றமடையும் விதமாகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகளிர் திட்டம் மற்றும் என்.டி.இ.சி.எல். நிறுவனத்தின் சமூக பங்களிப்பு நிதி ஆகியவற்றின் சார்பாக ரூ.20 லட்சம் மதிப்பீட்டில்

புதிதாக அமைக்கப்பட்ட பீனிக்ஸ் நாற்றங்கால் பண்ணையை மாவட்ட கலெக்டர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் செ.ஆ.ரிஷப், என்.டி.இ.சி.எல். நிறுவன பொது மேலாளர் ராஜீவ்கண்ணா, துணை இயக்குனர்கள் மரு.ஜவஹர்லால் (சுகாதாரப் பணிகள்), மரு.லட்சுமி முரளி (காசநோய்), மகளிர் திட்டம் திட்ட இயக்குனர் ரங்கராஜன்,கோ. மலர்விழி, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு மாவட்ட திட்டம் மேலாளர் (பொ) கே.எஸ். கௌரி சங்கர், கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

# கொடுங்கையூரில் குழந்தை பிறந்த 40 நாட்களில் இளம்பெண் தற்கொலை

**சென்னை டிச 3-**

குழந்தை பிறந்த 40 நாட்களில் இளம்பெண் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்க முடியாத விரக்தில் அவர் தற்கொலை செய்து கொண்டது தெரிந்தது.

சென்னை கொடுங்கையூர் முத்தமிழ்நகர் 3-வது தெருவைச் சேர்ந்தவர் இஸ்மாயில். இவருடைய மனைவி அஸ்வத் பிவி. இவர்களுடைய மகள் ஆஷா (வயது 24). பி.பி.ஏ. பட்டதாரியான இவருக்கு, கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பு புழல் சக்திவேல் நகரைச் சேர்ந்த அமீன் பாஷா என்பவருடன் திருமணம் ஆனது. இவர், அம்பத்தூரில் கார் பாலிஷ் போடும் வேலை செய்து வருகிறார். ஆஷா கர்ப்பமானார். கடந்த செப்டம்பர் மாதம் நிறைமாத கர்ப்பிணியான அவர், பிரசவத்துக்காக கொடுங்கையூரில் உள்ள தனது தாய் வீட்டுக்கு வந்து தங்கினார். 40 நாட்களுக்கு முன்பு ஆஷாவுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது.

ஆஷா, தனது குழந்தையுடன் தாய் வீட்டில் இருந்தார். ஆஷாவுக்கு தாய்ப்பால் சரியாக சுரக்கவில்லை என கூறப்படுகிறது. இதனால் அவரால் பிறந்த தன் குழந்தைக்கு சரிவர தாய்ப்பால் கொடுக்க முடியவில்லை என தெரிகிறது. இதனால் விரக்தி அடைந்த ஆஷா, வீட்டின் சமையல் அறையில் உள்ள மின்விசிறியில் புடவையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து கொடுங்கையூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணன் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். மேலும் ஆஷாவுக்கு திருமணமாகி ஒரு வருடமே ஆவதால் இதுபற்றி ஆர்.டி.ஓ. விசாரணைக்கும் பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

## மதுரவாயல் பைபாஸ் சாலையில்
# வேன் மீது மோட்டார் சைக்கிள் மோதி வாலிபர் மரணம்

**சென்னை டிச 3-**

நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர் சந்துரு (வயது22). மினி வேன் டிரைவர். இவர் நேற்று முன் தினம் இரவு வேனில் மரசாமான்கள் ஏற்றிக் கொண்டு புழல் பகுதியில் இருந்து பைபாஸ் சாலை வழியாக தாம்பரம் நோக்கி சென்று கொண்டிருந்தார்.

மதுரவாயல் அருகே வந்த போது வேனை சாலை ஓரமாக நிறுத்தி விட்டு அருகில் உள்ள கடைக்கு சென்றார். அப்போது அவ்வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த வாலிபர் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நின்ற வேன் மீது மோதினார். இதில் தூக்கி வீசப்பட்ட வாலிபர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

அவருக்கு சுமார் 30 வயது இருக்கும். அவர் யார்? எந்த பகுதியை சேர்ந்தவர் என்று தெரியவில்லை. கோயம்பேடு போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் மினி வேன் டிரைவர் சந்துருவை கைது செய்து விசாரித்து வருகிறார்கள்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# மேயர் விழிப்புணர்வு பிரசாரம்

**சென்னை டிச 3-**

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுக்கும் வகையில் ஆண்டுதோறும் 2 வார கால விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறும். கடந்த மாதம் 25-ந் தேதி பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் ஒழிப்பு தினம் அனுசரிக்கப்பட்டது. விழிப்புணர்வு பிரசார திட்டத்தை பெருநகர சென்னை மாநகராட்சி முன்னெடுத்துள்ளது. இதன் ஒருகட்டமாக மாநகராட்சி கட்டிடமான ரிப்பன் மாளிகை ஆரஞ்சு நிறத்தில் ஒளிரூட்டப்பட்டு இருக்கிறது. இதேபோல நேப்பியர் பாலம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் ஆரஞ்சு நிறத்தில் ஜொலித்து வருகின்றன.

இதுதவிர மாநகராட்சி சார்பில் பெண்கள் அதிகம் பணிபுரியும் இடங்கள் மற்றும் பொதுவான பகுதிகளிலும் பாலியல் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் இந்த பிரசார திட்டத்தின் ஒரு பகுதியாக மாநகராட்சி மேயர் பிரியா சமூக வலைதளத்தில் தனது கருத்தை பதிவிட்டுள்ளார். பாலியல் ரீதியான அத்துமீறல்களை கண்டிக்கும் வகையில், 'போதும்... நிறுத்துங்கள்...' என்று குறிப்பிடுவது போல தனது கையை நீட்டி பிரியா இந்த விழிப்புணர்வில் ஈடுபட்டுள்ளார்.

அவரது இந்த நூதன விழிப்புணர்வு சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# வடபழனியில் டீக்கடையை உடைத்து கொள்ளை

**சென்னை டிச 3-**

அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ காலனி பகுதியை சேர்ந்தவர் அப்துல் காதர். இவர் வடபழனி நெற்குன்றம் பாதையில் டீக்கடை நடத்தி வருகிறார்.

நேற்று அதிகாலை 4.30 மணி அளவில் வழக்கம் போல அப்துல் காதர் கடையை திறக்க வந்தார் அப்போது ஷட்டர் பூட்டு உடைக்கப்பட்டு திறந்து கிடந்ததை கண்டு அவர் அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்தபோது கல்லாப் பெட்டியில் இருந்த ரூ.1,500 ரொக்கம் மற்றும் ரூ.2 ஆயிரம் மதிப்புள்ள சிகரெட் பாக்கெட்டுகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது.

# திட்டச்சேரியில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள்

**நாகப்பட்டினம்,டிச.03-**

நாகை அருகே திட்டச்சேரியில் திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திமுக இளைஞரணி சார்பில் பள்ளி மாணவ மாணவிகளுக் கிடையே விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

இதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பேரூர் திமுக செயலாளர் எம்.முகமது சுல்தான், பேரூர் திமுக அவை தலைவர் ராமலிங்கம் முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஹமீது ஜெகபர், இளஞ்செழியன், ப.கொந்தகையின் நிர்வாக சபை தலைவர் முகமது ரஃபீக் ஆகியோர் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினர்.இதற்கான ஏற்பாடுகளை இளைஞரணி செயலாளர் ஆட்டோ சாகுல் செய்திருந்தார்.

# கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்



**நாகப்பட்டினம்,டிச.03-**

திருமருகல் ஒன்றியம் திருச்செங்காட்டங்குடி ஊராட்சி புதுக்கடையில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் வெள்ளிக்கிழமை நடைப்பெற்றது.

கால்நடை பராமரிப்பு துறையின் மண்டல இணை இயக்குனர் சஞ்சீவ்ராஜ் அறிவுரையின் பேரிலும்,உதவி இயக்குனர் விஜயகுமார் உத்தரவின் பேரிலும் இம்முகாம் நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் வள்ளி கலியமூர்த்தி தலைமை வகித்தார்.கால்நடை உதவி மருத்துவர்கள் முத்துக்குமார், சிவபிரியா, ஒன்றியக்குழு உறுப்பினர் ஆர்.இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த முகாமில் கால்நடை நோய்களுக்கு எதிரான தடுப்பூசி போடுதல்,நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை,பசு மற்றும் எருமை இனங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல், சினைப் பரிசோதனை,மலடு நீக்கம்,கன்றுகள்,ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம்,கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் தடுப்பூசி ஆகியவை போடப்பட்டது. இந்த முகாமில் 100-க்கும் மேற்பட்ட கால்நடைகள் பயன் பெற்றன. இதில் சிறந்த கால்நடை உரிமையளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.மேலும் விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் துணை தலைவர் சதிஷ், ஊராட்சி செயலர் இளங்கோவன், கால்நடை ஆய்வாளர் தனசேகரன்,கால்நடை பராமரிப்பு உதவியாளர் சிவராஜவள்ளி,செயற்கை முறை கருவூட்டாளர் ஸ்ரீகுமார், தம்பிராஜா மற்றும் கால் நடை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

# வேதாரண்யத்தில் அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கான கலைத் திருவிழா

**வேதாரண்யம்,டிச.03-**

வேதாரண்யம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வட்டார அளவிலான கலைத்திருவிழாவின் மூன்றாவது நாள் நிகழ்ச்சியில் வட்டாரத்தில் உள்ள 51 அரசு நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை சேர்ந்த 420 மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர் மாணவ மாணவிகளின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் கல்வித்துறை சார்பில் கலைத் திருவிழா நடத்தப்படுகிறது

கலைத் திருவிழாவையொட்டி நடைபெற்ற போட்டிகளில் பேச்சுப் போட்டி, வீதி நாடகம் பாவனை நடிப்பு திருக்குறள் ஒப்புவித்தல் கதை சொல்லுதல், பாரதியார் பாரதிதாசன் ஆகியோரின் கவிதை எழுதல் கையெழுத்து போட்டி போன்ற 35 வகையான போட்டிகளில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர் 6,7,8 வகுப்பு மாணவர்கள் 9,10 வகுப்பு மாணவர்கள் 11,12 வகுப்பு மாணவர்கள் என மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன.

# ஆஸ்திரேலிய முன்னாள் கேப்டன் ரிக்கி பாண்டிங் மருத்துவமனையில் அனுமதி




**பெர்த், நவ.03**

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் ரிக்கி பாண்டிங், திடீர் உடல்நல பாதிப்பால் ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியின் நேரலை வர்ணனையில் இருந்து வெளியேறியுள்ளார். அதோடு அவர் பெர்த் நகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இரு அணிகளும் தற்போது பெர்த் மைதானத்தில் டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றன. இந்தப் போட்டியின் மூன்றாவது நாள் மதிய நேர இடைவேளையின்போது பெர்த் மைதானத்தில் இருந்து அவர் வெளியேறியுள்ளார். அதன்பிறகு அவர் மைதானத்திற்கு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2003 மற்றும் 2007 ஒருநாள் உலகக் கோப்பை தொடரை பாண்டிங் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி வென்றது குறிப்பிடத்தக்கது. 47 வயதான அவர் 2002 முதல் ஒரு நாள் கிரிக்கெட் அணியையும், 2004 முதல் டெஸ்ட் கிரிக்கெட் அணியையும் வழி நடத்தி வந்தார். கடந்த 2012 வாக்கில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

168 டெஸ்ட், 375 ஒருநாள் மற்றும் 17 டி20 போட்டிகள் என மொத்தம் 27,483 ரன்களை அவர் சர்வதேச கிரிக்கெட்டில் எடுத்துள்ளார். தற்போது டெல்லி கேபிடல்ஸ் அணியின் பயிற்சியாளராக இயங்கி வருகிறார்.

## இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட்:
# முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் சிறப்பான தொடக்கம்




**ராவல்பிண்டி, நவ.03**

பாகிஸ்தானுக்கு சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இங்கிலாந்து - பாகிஸ்தான் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ராவல்பிண்டியில் தொடங்கியது. 'டாஸ்' ஜெயித்த இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் முதலில் பேட்டிங்கை தேர்ந்தெடுத்தார்.

ஜாக் கிராவ்லியும், பென் டக்கெட்டும் இங்கிலாந்தின் இன்னிங்சை அதிரடியாக தொடங்கினர். . இதனால் இருவரும் எளிதாக ரன் வேட்டை நடத்தினர். 13.4 ஓவர்களில் அணி 100 ரன்களை கடந்தது. ரன்ரேட் 6-க்கும் குறையாமல் நகர்ந்தது. கிராவ்லி தனது 3-வது சதத்தையும், டக்கெட் தனது முதலாவது சர்வதேச சதத்தையும் அடித்தனர். ஸ்கோர் 233 ஆக உயர்ந்த போது டக்கெட் 107 ரன்களில் (110 பந்து, 15 பவுண்டரி) எல்.பி.டபிள்யூ. ஆனார்.

கிராவ்லி 122 ரன்களில் (111 பந்து, 21 பவுண்டரி) ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்களில் முன்னாள் கேப்டன் ஜோ ரூட் (23 ரன்) மட்டும் நிலைக்கவில்லை. மற்றபடி விக்கெட் கீப்பர் ஆலி போப்பும், ஹாரி புரூக்கும் தங்களது கைவரிசையை காட்டி மேலும் வலுவூட்டினர். 3-வது சதத்தை அடித்த போப் 108 ரன்களில் (104 பந்து, 14 பவுண்டரி) எல்.பி.டபிள்யூ. முறையில் வீழ்ந்தார். புதுமுக சுழற்பந்து வீச்சாளர் சாத் ஷகீலின் ஒரே ஓவரில் 6 பவுண்டரி சாத்திய ஹாரி புரூக்கும் மூன்று இலக்கத்தை தொட்டார். 80 பந்துகளில் தனது சதத்தை நிறைவு செய்த புரூக், இங்கிலாந்து வீரர்களில் மின்னல் வேகத்தில் சதம் விளாசிய 3-வது வீரராக சாதனை பட்டியலில் இணைந்தார். போதிய வெளிச்சமின்மையால் முன்கூட்டியே நிறுத்தப்பட்ட முதல் நாள் ஆட்டம் முடிவில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 75 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 506 ரன்கள் குவித்தது. 2-வது நாள் ஆட்டம் நேற்று நடந்தது சீரான இடைவெளியில் இங்கிலாந்து அணி ;விக்கெட்டுகளை. இழந்தது.ஹாரி ப்ரூக் 153 ரன்களும்,. லிவிங்ஸ்டன் 9 ரன்,கேப்டன் ஸ்டோக்ஸ் 41 ரன்கள் ,வில் ஜாக்ஸ் 30 ரன்களும், ஆலி ராபின்சன் 37 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் முதல் இன்னிங்ஸில் 657 ரன்களை குவித்தது இங்கிலாந்து அணி ஆட்டமிழந்தது. பாகிஸ்தான் சார்பில் சாஹித் அகமது 4 விக்கெட்டும் ,நசீம் ஷா 3 விக்கெட் வீழ்த்தினர். பின்னர் முதல் இன்னிங்க்சை தொடங்கிய பாகிஸ்தான் அணியின் தொடக்க வீரர்கள் அப்துல்லா ஷாபிக் மற்றும் இமாம் உல் ஹக் ஆகிய இருவரும் மிகச் சிறப்பாக பேட்டிங் ஆடினர். இருவருமே அரைசதம் அடித்து ,சதத்தை நெருங்கிய நிலையில், 2ம் நாள் ஆட்டம் முடிந்தது. 2ம் நாள் ஆட்ட முடிவில் பாகிஸ்தான் அணி விக்கெட் இழப்பின்றி 181 ரன்கள் அடித்துள்ளது.அப்துல்லா ஷாபிக் 89 ரன்களுடனும், இமாம் உல் ஹக் 90 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

# ஐபிஎல் போட்டியில் தனது ஓய்வு முடிவு உணர்ச்சிப்பூர்வமாக பதிவிட்ட பிராவோ




**சென்னை, நவ.03**

ஐபிஎல் போட்டிகளில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நட்சத்திர வீரராக வலம் வந்தவர் மேற்கு இந்திய தீவை தேர்ந்த ஆல் ரவுண்டர் டுவைன் பிராவோ. சென்னை அணிக்காக பல போட்டிகளில் விளையாடி அணிக்கு வெற்றியை தேடித் தந்தவர். பேட்டிங் மற்றும் பந்துவீச்சு இரண்டிலும் தனது பங்களிப்பை அளிப்பது மட்டுமல்லாமல், பீல்டிங்கிலும் கலக்குபவர்.

இவர், கேட்ச் பிடிக்கும் போதெல்லாம் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக ஆடும் டான்ஸ்சுக்கு ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பு உண்டு. இப்படி தனது அனுபவத்தை ஒவ்வோரு போட்டியிலும் வெளிப்படுத்தி சென்னை அணியில் மிக முக்கியமான வீரராக திகழ்ந்துவந்த பிராவோ தற்போது ஓய்வு முடிவினை அறிவித்து உள்ளார். சென்னை அணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், பிராவோ ஐபிஎல் தொடரில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார். அதே நேரத்தில் சென்னை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக தனது புதிய பணியை மேற்கொள்ளவுள்ளார்.

இதுகுறித்து தனது இன்ஸ்டாகிராம் பதிவில் பிராவோ கூறும்போது, மிகக் கடினமான டி20 லீக்கில் 15 ஆண்டுகள் விளையாடிய பிறகு நான் இனி ஐபிஎல்லில் பங்கேற்க மாட்டேன் என்று இன்று அறிவிக்கிறேன். இது ஒரு சிறந்த பயணம், நிறைய ஏற்ற தாழ்வுகளுடன் இருந்தது. அதே நேரத்தில், நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். கடந்த 15 ஆண்டுகளாக ஐபிஎல்-ல் ஒரு அங்கமாக இருந்துள்ளேன். இது எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் மற்றும் முக்கியமாக எனது ரசிகர்களுக்கும் ஒரு சோகமான நாள் என்பதை நான் அறிவேன்.

ஆனால் அதே நேரத்தில், கடந்த 15 வருடங்களாக நாம் அனைவரும் எனது வாழ்க்கையை கொண்டாட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இன்ஸ்டாகிராம் பதிவில் பிராவோ கூறியுள்ளார். பயிற்சியாளர் தொப்பியை அணிய ஆவலுடன் காத்திருக்கிறேன் என்பதை எனது ரசிகர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சென்னை அணியில் இளம் பந்துவீச்சாளர்களுடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்.

அடுத்த தலைமுறை சாம்பியன்களுக்கு உதவுவதற்கும் மேம்படுத்துவதற்கும் எனது அழைப்பு இப்போது உள்ளது. பல ஆண்டுகளாக அனைத்து அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். 61 போட்டிகளில் விளையாடி 183 விக்கெட்டுகளை வீழ்த்தி ஐபிஎல் தொடரில் அதிக விக்கெட் வீழ்த்தியவர் பிராவோ. 130 ஸ்டிரைக் ரேட்டில் 1560 ரன்களை எடுத்துள்ளார். சென்னை அணியின் பல வெற்றிகளில் முக்கிய பங்கு வகித்தார். 2011, 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சென்னை சூப்பர் கிங்ஸின் ஐபிஎல் வெற்றிகளிலும், 2014 இல் சாம்பியன்ஸ் லீக் டி20 வெற்றியிலும் அவர் ஒரு அங்கமாக இருந்தார். ஐபிஎல் சீசனில் இரண்டு முறை (2013 மற்றும் 2015) அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

# அறிமுக போட்டியில் பாகிஸ்தான் பவுலர் மோசமான சாதனை



**ராவல்பிண்டி,நவ.03**

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மிகவும் மோசமான சாதனையை படைத்துள்ளார் பாகிஸ்தான் அணியின் அறிமுக பவுலர் ஜாஹித் மொஹமத்.

இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 33 ஓவர்கள் வீசி, 235 ரன்களை விட்டுக் கொடுத்துள்ளார் அவர். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அறிமுக போட்டியில் ஒரு இன்னிங்ஸில் அதிக ரன்களை விட்டுக் கொடுத்த பவுலர் ஆகியுள்ளார் அவர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி, பாகிஸ்தான் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. தற்போது இரு அணிகளும் இந்தத் தொடரின் முதல் போட்டியில் விளையாடி வருகின்றன. ராவல்பிண்டி மைதானத்தில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸில் 101 ஓவர்களில் 657 ரன்களை குவித்து ஆல் அவுட் ஆகியுள்ளது.

அந்த இன்னிங்ஸில்தான் அறிமுக பவுலர் ஜாஹித் மொஹமத் பந்துவீச்சை இங்கிலாந்து வீரர்கள் துவம்சம் செய்துள்ளனர். மொத்தம் 33 ஓவர்கள் வீசிய அவர் 1 மெய்டன் உட்பட 235 ரன்களை விட்டுக் கொடுத்தார். 4 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார்.

## பிஎல் மினி ஏலம்:
# 991 பேர் ஏலத்தில் பங்கேற்க பதிவு 87 வீரர்களை தேர்ந்தெடுக்க வாய்ப்பு




**மும்பை,நவ.03**

ஐ.பி.எல். 2023 ஆம் ஆண்டுக்கான மினி ஏலம் வரும் டிசம்பர் 23ஆம் தேதி கொச்சியில் நடைபெறுகிறது. இந்த ஏலத்தில் பங்கு பெற வீரர்கள் தங்களது பெயரை பதிவு செய்யும் நாள் நவம்பர் 30ஆம் தேதியுடன் முடிவடைந்தது. இந்த நிலையில் மொத்தமாக 991 பேர் ஐபிஎல் மினி இடத்தில் பங்கேற்க தங்களுடைய பெயரை பதிவு செய்து இருக்கிறார்கள்.

அவர்களில் 741 பேர் இந்தியர்கள் ஆவர். 14 வெளிநாடுகளில் இருந்து வீரர்கள் ஐபிஎல்லில் பங்கு பெற பதிவு செய்துள்ளனர். அதில் ஆஸ்திரேலியாவில் இருந்து அதிகபட்சமாக 57 வீரர்கள் பதிவு செய்துள்ளனர். அதைத்தொடர்ந்து தென் ஆப்பிரிக்காவில் இருந்து 52 வீரர்களும், வெஸ்ட் இண்டீசில் இருந்து 33 வீரர்களும், இங்கிலாந்தில் இருந்து 31 வீரர்களும், நியூசிலாந்தில் இருந்து 27 வீரர்களும், இலங்கையில் இருந்து 23 வீரர்களும், ஆப்கானிஸ்தானில் இருந்து 14 வீரர்களும், அயர்லாந்தில் இருந்து 8 வீரர்களும், வங்கதேசம், ஜிம்பாப்வே, யுஏயில் இருந்து தலா 6 வீரர்களும், நமிபியாவில் இருந்து 5 வீரர்களும், ஸ்காட்லாந்தில் இருந்து 2 வீரர்களும் பதிவு செய்துள்ளனர்.

ஒரு அணி நிர்வாகத்தில் அதிகபட்சமாக 25 வீரர்களை தேர்வு செய்ய முடியும். அதன்படி அணி நிர்வாகங்கள் தக்க வைத்துக்கொண்ட வீரரகளை தவிர்த்து இன்னும் 87 வீரர்களை மட்டும் தான் அணிகள் தேர்வு செய்ய முடியும், அதில் 30 பேர் வெளிநாட்டு வீரர்கள் ஆவர். பதிவு செய்த 991 வீரர்களில் 185 பேர் அவர்கள் சொந்த நாட்டுக்காக சர்வதேச போட்டிகளில் ஆடியவர்கள், 786 பேர் சர்வதேச போட்டிகளில் ஆடாதவர்கள், 20 பேர் அசோசியேட் நாடுகளை சேர்ந்தவர்கள் ஆவர். சர்வதேச போட்டிகளில் ஆடிய 185 பேரில் 19 பேர் இந்தியாவை சேர்ந்தவர்கள் ஆவர். இதை போன்று சர்வதேச அனுபவம் இல்லாத, ஏற்கனவே ஐபிஎல் போட்டியில் விளையாடிய இந்திய வீரர்கள் 91 பேர் இந்த ஏலத்தில் பங்கு பெற தங்களது பெயரை பதிவு செய்து இருக்கிறார்கள்.

# முதல் டெஸ்ட் போட்டியில் அசத்திய ஜூனியர் சந்தர்பால்

**பெர்த்,நவ.03**

தந்தை ஷிவ்நரைன் சந்தர்பால் வழியில் தனது முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அரைசதம் பதிவு செய்து அசத்தியுள்ளார் டஜ்நரைன் (Tagenarine) சந்தர்பால். ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவர் மேற்கிந்திய தீவுகள் அணிக்காக அறிமுக வீரராக களம் கண்டுள்ளார்.



26 வயதான அவர் மேற்கிந்திய தீவுகள் அணியின் ஜாம்பவான் ஷிவ்நரைன் சந்தர்பாலின் மகன். தந்தையை போலவே இவரும் இடது கை பேட்ஸ்மேன்தான். கயானா அணிக்காக உள்ளூர் கிரிக்கெட்டில் லிஸ்ட் ஏ மற்றும் ஃபர்ஸ்ட் கிளாஸ் கிரிக்கெட்டில் அவர் விளையாடி உள்ளார். அண்டர் 19 கிரிக்கெட்டில் மேற்கிந்திய தீவுகள் அணிக்காக விளையாடிய அனுபவமும் கொண்டவர்.

கடந்த ஆகஸ்ட் வாக்கில் வங்கதேச 'ஏ' அணிக்கு எதிரான நான்கு நாட்கள் போட்டியில் சதம் விளாசி அசத்தினார். அதனால், அவருக்கு ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணியில் இடம்பெறும் வாய்ப்பு கிடைத்தது. இந்தத் தொடருக்கு முன்னதாக நடைபெற்ற வார்ம்-அப் போட்டியில் சதம் மற்றும் அரைசதம் பதிவு செய்தார். அதன் மூலம் பெர்த் மைதானத்தில் தற்போது நடைபெற்று வரும் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுக வீரராக களம் கண்டார்.

தனது முதல் டெஸ்ட் போட்டியில் 79 பந்துகளில் 51 ரன்களை எடுத்து அவுட்டானார். அவரது தந்தை ஷிவ்நரைன் சந்தர்பால், அவர் விளையாடிய முதல் டெஸ்ட் போட்டியில் 135 பந்துகளை எதிர்கொண்டு 62 ரன்கள் எடுத்திருந்தார். இருவரும் தங்கள் முதல் இன்னிங்ஸில் அரைசதம் பதிவு செய்துள்ளனர். இதன் மூலம் தான் தந்தையின் பேர் சொல்லும் பிள்ளை என நிரூபித்துள்ளார் ஜூனியர் சந்தர்பால்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய விருதுகள்: ஜனாதிபதி முர்மு இன்று வழங்குகிறார்

**புதுடெல்லி, டிச. 03-**

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமான இன்று 3-ம் தேதி மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் தேசிய விருது வழங்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் சிறப்பு விருந்தினராக ஜனாதிபதி திரவுபதி முர்மு கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளை மேம்படுத்தும் நோக்கில் பணியாற்றிய தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கும், மாற்று திறனாளி துறையில் சிறப்பாக செயலாற்றிய மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கும் விருதுகளை வழங்குகிறார்.

2021 மற்றும் 2022-ம் ஆண்டிற்கான தேசிய விருதுகள் 14 பிரிவுகளின் கீழ் இன்று வழங்கப்படவுள்ளன. மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் வீரேந்திர குமார் விழாவிற்கு தலைமை வகிக்கிறார். மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணை அமைச்சர்கள் ராம்தாஸ் அத்வாலே, ஏ. நாராயணசாமி மற்றும் பிரதிமா பௌமிக் ஆகியோரும் விழாவில் கலந்து கொள்கின்றனர்.

இந்த விருதுகளுக்காக 2021-ம் ஆண்டிற்கான மொத்தம் 844 விண்ணப்பங்களும், 2022-ம் ஆண்டிற்கான விருதுகளுக்கு என மொத்தம் 1210 விண்ணப்பங்களும் பெறப்பட்டன. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் பதிவுகளை ஆய்வு செய்து விருது பெறுபவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மத்திய சமூக நிதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## இந்த ஆண்டிலாவது மக்கள் பயன்படுத்தும் வகையில்
# பொங்கல் பரிசு தொகுப்பை அரசு வழங்க வேண்டும்
## முன்னாள் அமைச்சர் ஆர்.பி உதயகுமார் கோரிக்கை



**மதுரை, டிச. 03-**

மதுரை எஸ்.எஸ்.காலனியில் அமைந்துள்ள காஞ்சி ஸ்ரீ மகா பெரியவர் கோவிலில் குருவார தின சிறப்பு புஷ்பாஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தனது மகள் உட்பட 51 ஏழை,எளிய மணமக்களுக்கான திருமண விழா அழைப்பிதழை வைத்து சுவாமி தரிசனம் செய்து கோவில் நிர்வாகிகளுக்கு அழைப்பிதழை முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், அவரது மகள் பிரியதர்ஷினி ஆகியோர் வழங்கினர். அதை தொடர்ந்து ஆர்.பி. உதயகுமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

பொங்கல் திருநாளில் முதல் முதலில் 100 ரூபாய் பொங்கல் பரிசினை அம்மா வழங்கினார். அதனை தொடர்ந்து அம்மாவின் வழியில் வந்த எடப்பாடியார் ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசு வழங்கினார். 2021-ம் ஆண்டு அரிசி,சர்க்கரை, உலர் திராட்சை, முந்திரி, ஏலக்காய், ஒரு முழு நீளக்கரும்புடன் 2500 ரூபாய் பொங்கல் பரிசு தொகையை எடப்பாடி பழனிசாமி வழங்கினார். கடந்த ஆண்டு குடும்ப அட்டைகளுக்கு வழங்கிய பொங்கல் பரிசு தொகுப்புகளில் அரிசி, வெல்லம், முந்திரி, ஏலக்காய், உலர் திராட்சை உள்ளிட்ட 20 வகையான பொருட்களை அண்டை மாநிலங்களில் இருந்து பெரும்பாலும் வாங்கப்பட்டது. இந்த பொருட்கள் பயன்படுத்த முடியாத அளவில் இல்லை என்று எடப்பாடியார் சுட்டி காட்டினார். பொங்கல் பரிசு தொகை என்பது வெறும் பரிசுத் தொகுப்பு அல்ல, அதில் உணர்வுகள் இருக்கிறது.

இந்த நிலையில் இந்தாண்டு பொங்கல் கொள்முதல் நிலை என்ன அரசு தெளிவாக நீதிமன்றத்திலே கூறுவதற்கு முன் வருமா? கடந்த பொங்கல் பரிசு தொகுப்பில் செய்து இருக்கிற குளறுபடிகளுக்கு, சாட்சிகளே தேவையில்லை. கடந்த ஆண்டு பொங்கல் பரிசு தொகை வாங்கியவர்கள் எல்லோரும் சாட்சியாக இருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு வருகிற ஆண்டிலாவது, பொங்கல் பரிசு பொருட்களை மக்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# 16 ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்: தமிழக அரசு உத்தரவு

**சென்னை, டிச. 03-**

தமிழகத்தில் 16 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்து தலைமை செயலாளர் இறையன்பு உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அபூர்வா, ஹிதேஸ்குமார் மக்வானா, அதுல்யா, எஸ்.ஜே.சிரு, ஆபிரகாம், சரவண வேல்ராஜ், ஜான் லூயிஸ், செல்வராஜ், லில்லி, நந்தகோபால், கிரண் குராலா, பழனிசாமி உள்ளிட்ட 16 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்து தலைமை செயலர் இறையன்பு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி இளைஞர் நலன், விளையாட்டு வளர்ச்சித்துறை கூடுதல் தலைமை செயலாளராக அதுல்யா மிஸ்ரா நியமனம்

வீடு, நகர்ப்புற மேம்பாட்டுத்துறை முதன்மை செயலாளராக அபூர்வா, டி.என்.பி.எஸ்.சி. தேர்வு கட்டுப்பாட்டாளர் கிரண் குரலா பேரூராட்சிகள் இயக்குனராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் உயர்க்கல்வித்துறை கூடுதல் செயலாளராக பழனிசாமி நியமனம் செய்யப்பட்டுள்ளார். வீட்டு வசதித்துறை செயலாளராக இருந்த ஹிதேஷ்குமார் மக்வானா, டெல்லி தமிழ்நாடு இல்லத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண் இயக்குநர் எஸ்.ஜே.சிரு, சமூக நலத் துறை செயலாளராக மாற்றப்பட்டுள்ளார். வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சிறப்பு செயலாளர் டி.ஆபிரகாம், சமூக சீர்திருத்த துறை செயலாளராக மாற்றப்பட்டுள்ளார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மேலாண் இயக்குனராக இ.சரவண வேல்ராஜ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நகர் ஊரமைப்பு இயக்கக திட்ட இயக்குனராக வி.கணேசனும், தொழில்துறை சிறப்பு மேலாளர் ஆர்.லில்லி, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறையின் சிறப்பு செயலாளராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பேரூராட்சிகள் இயக்குனராக இருந்து வரும் டாக்டர் ஆர். செல்வராஜ் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழ்நாடு பிறப்படுத்தப்பட்டோர் நலத்துறையின் ஆணையாளராக ஆர்.நந்தகோபால், வருவாய் நிர்வாக ஆணையராக இருந்த ஜான் லூயிஸ் அரசு கேபிள் கார்ப்பரேஷன் நிர்வாக இயக்குனராகவும், சேலம் சாகோசெர்வ் மேலாண் இயக்குனராக ஐ.ஏ.எஸ். அதிகாரி எம்.என். பூங்கொடியும், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார நல இயக்குனராக அனில் மேஷ்ராம் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# தங்கம் விலை சவரன் ரூ.40 ஆயிரத்தை தாண்டியது

**சென்னை, டிச. 03-**

சென்னையில் நேற்று ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 440 அதிகரித்து, 22 கேரட் தங்கம் ஒரு சவரன் 40,080 ரூபாய்க்கு விற்பனையானது. அதன்படி, கிராமுக்கு ரூ. 55 ரூபாய் அதிகரித்து ஒரு கிராம் தங்கம் விலை 5,010 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை அதிகரித்து வந்த நிலையில், நேற்று ஒரே நாளில் ரூ.440 உயர்ந்து, ஒரு சவரன் தங்கம் விலை 40 ஆயிரம் ரூபாயை தாண்டியது. தங்கம் விலை அதிகரிப்பால் பொது மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதே போல், வெள்ளி கிலோவுக்கு 700 ரூபாய் அதிகரித்து 70,500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பின் வீழ்ச்சி உள்ளிட்ட காரணங்களால் தங்கம் விலை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மரம் மனிதனின் உரம்




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, முதல்வரின் முகவரித்துறையில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, முதல்வரின் முகவரி சிறப்பு அலுவலர் ஷில்பா பிரபாகர் சதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் "கரிசல் காட்டு இலக்கியத்தின்" முன்னோடி எழுத்தாளர் கி.ராஜநாராயணனுக்கு ரூ.1 கோடியே 50 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முழு திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவரங்கத்தை காணொலிக்காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கனிமொழி எம்.பி., தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, செயலாளர் ம.சு.சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று, பதிவுத்துறையைச் சார்ந்து பணிபுரியும் ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக ஆவண எழுத்தர்களின் நல நிதியத்தை தொடங்கி வைத்து, இந்நிதியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்கிடும் அடையாளமாக 7 ஆவண எழுத்தர்களுக்கு உறுப்பினர் அட்டைகளை, முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அருகில் அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச்செயலாளர் வெ.இறையன்பு, வணிகவரித்துறை செயலாளர் ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் சிவன் ஆகியோர் உள்ளனர்.



● தேனி மாவட்டம், பெரியகுளத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை, தூத்துக்குடி மாநகர், தென்காசி வடக்கு, சேலம் புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்துப்பெற்றனர். அருகில் கொள்கை பரப்பு செயலாளர் புகழேந்தி, கோவை மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு இணை செயலாளர் ராஜகோபால் மற்றும் பலர் உள்ளனர்.

### பதிவுத்துறையைச் சார்ந்து தொழில்புரிந்து வரும்

# ஆவண எழுத்தர்களுக்கு நல நிதியம் அமைப்பு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, டிச. 03-

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, பதிவுத்துறையைச் சார்ந்து பணிபுரியும் ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக ஆவண எழுத்தர்களின் நல நிதியத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கிவைத்தார். அதை தொடர்ந்து, இந்நிதியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்கிடும் அடையாளமாக ஏழு ஆவண எழுத்தர்களுக்கு உறுப்பினர் அட்டைகளையும் முதல்வர் வழங்கினார்.

தமிழகத்தில் பத்திரப் பதிவு அலுவலகங்களைச் சார்ந்து தொழில் புரிந்து வரும் ஆவண எழுத்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஆவண எழுத்தர்களின் நல நிதியம் உருவாக்கப்படும் என்று 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அவ்வறிவிப்பிற்கிணங்க வணிக வரி மற்றும் பதிவுத் துறையால் 28.10.2010 அன்று அரசாணை வெளியிடப்பட்ட போதிலும், கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இந்த நல நிதியத்திற்கு செயல்வடிவம் கொடுக்கப்படாமல் இருந்து வந்தது.

அதனைத் தொடர்ந்து, 2021-2022 ஆம் நிதியாண்டிற்கான பதிவுத்துறை மானியக் கோரிக்கையில், பதிவுத்துறையைச் சார்ந்து பணிபுரியும் ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக, ஆவண எழுத்தர்களின் நல நிதியம் முழுவதுமாக செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆவண எழுத்தர்களின் நல நிதியம் குறித்து 2010-ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட வகையில் நலத் திட்டங்களுக்கான உதவித் தொகை தற்போதைய பண மதிப்பீட்டின் அடிப்படையில் மிகக் குறைவாக உள்ளதாக கருதப்பட்டதால், தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு நலத் திட்டங்களின் அடிப்படையில் தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் நல நிதியம் நடைமுறைப்படுத்தும் வகையில், சட்டப்பேரவையில் தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் நல நிதியச் சட்டம்-2022 இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின் படி, 30.06.2021 அன்றுள்ளவாறு ஆவண எழுத்தர் உரிமம் பெற்ற 5188 நபர்களிடம் ஆவண எழுத்தர்களின் நல நிதியத்தில் விருப்பத்தின் அடிப்படையில் உறுப்பினர்களாக சேர ஒருமுறை செலுத்தப்படும் சந்தாவாக ரூ.1000/- வசூலிக்கப்படும். இதுமட்டுமல்லாமல், பதிவுத் துறையில் பதிவு செய்யப்படும் ஆவணம் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ. 10/- வீதம் ஆவண எழுத்தர்களின் நல நிதியத்திற்காக வசூல் செய்யப்படும்.

இவ்வாறு ஒருமுறை செலுத்தப்படும் சந்தா தொகை மற்றும் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் நல நிதிய பங்களிப்பு ஆகியவை நிதியமாக நிர்வகிக்கப்பட்டு அதிலிருந்து நல நிதிய நலத் திட்டங்களுக்கான செலவுகள் ஈடு செய்யப்படும்.

ஆவண எழுத்தர்களின் நல நிதிய உறுப்பினர்களுக்கு, விபத்து மரணம் மற்றும் நிரந்தர ஊனத்திற்கு உதவித் தொகையாக ஒரு லட்சம் ரூபாய், இயற்கை மரணம் மற்றும் மற்ற உடல் ஊனங்களுக்கு உதவித் தொகையாக 20 ஆயிரம் ரூபாய், மாதாந்திர ஓய்வூதியம், திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இறுதி சடங்கு நிதி, மூக்குக்கண்ணாடி உதவித் தொகை போன்ற நலத் திட்ட உதவிகள் வழங்கப்படும்.

பதிவுத்துறை தலைவரை தலைவராகவும், இதர பதிவுத் துறை அலுவலர்களையும், ஆவண எழுத்தர் சங்கத்திலிருந்து நியமனம் செய்யப்படும் 4 நபர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு குழு இந்த நல நிதியத்தை நிர்வகிக்கும்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் இறையன்பு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஜோதி நிர்மலாசாமி மற்றும் பதிவுத்துறை தலைவர் சிவன்அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# செல்போன் பயன்பாட்டிற்கு...(1-ம் பக்க தொடர்ச்சி)

இது ஏற்கத்தக்க விஷயம் அல்ல.

குறிப்பாக தமிழகத்தில் இருக்கக் கூடிய கோவில்கள் சத்திரம் போல் இருக்கின்றது. திருப்பதியில் கோவில் வாசலில் கூட செல்போன் எடுத்து செல்ல முடியாது. அந்த நிலை தமிழகத்தில் உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தனர்.

இதனையடுத்து, திருச்செந்தூர் கோவிலுக்குள் செல்போன் எடுத்துச் செல்ல உடனடியாக தடை விதிக்கப்படுகிறது. இந்த சுற்றறிக்கையை இந்து அறநிலையத்துறை உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

தடையை மீறி செல்போன் பயன்படுத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு திருப்பி அளிக்கக் கூடாது. குறிப்பாக கோவிலுக்குள் செல்போன் எடுத்து செல்ல அர்ச்சகர்களுக்கும் தடை விதிக்கப்படுகிறது.

இந்த நடைமுறை அமல்படுத்தப்பட்டதற்கான நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு நீதிபதிகள் வழக்கை ஒத்திவைத்தனர்.

இதனிடையே இந்த வழக்கு நேற்று ஐகோர்ட் மதுரைக்கிளையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், தமிழகத்தின் அனைத்து கோவில்களிலும் செல்போன் பயன்படுத்த தடை விதித்து உத்தரவிட்டனர்.

மேலும் கோவில்களின் புனிதம் மற்றும் தூய்மையை காக்கும் விதமாக இந்த உத்தரவுகளை அனைத்து கோவில்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நீதிபதிகள் கூறினர்.

கோயில்களின் மாண்பை பாதுகாக்கும் வகையில் ஆடைகளிலும் கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என்று இந்து சமய அறநிலையத்துறை ஆணையருக்கு நீதிபதிகள் மகாதேவன், சத்யநாராயண பிரசாத் ஆகியோர் அடங்கிய அமர்வு அறிவுறுத்தினர்.

அதை தொடர்ந்து கோவிலுக்குள் வரும் பக்தர்கள் மரபினை காக்கும் வகையில் ஆடைகள் அணிந்து வர விளம்பரப் பலகை வைக்கப்பட்டுள்ளதாக திருச்செந்தூர் கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, டிச. 03-

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தில் இன்று முதல் 6-ம் தேதி வரை இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது, தென் கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் வரும் 5-ம் தேதி ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக் கூடும். இது அடுத்த 48 மணி நேரத்தில் மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் வலுவடையக் கூடும். பிறகு மேலும் மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து வரும் 8-ம் தேதியை ஒட்டி வடதமிழகம், புதுவை மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளின் அருகில் நிலவக்கூடும் என கூறப்பட்டுள்ளது.

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று 03-ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களிலும், உள்தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை 04-ம் தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வரும் 05-ம் தேதி தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், 06-ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது/மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.



● சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள, மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தி, அவரது நினைவிடத்தில் நடைபெற்று வரும் கட்டுமானப்பணிகளை, செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு, பொதுப்பணித்துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். அருகில் செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் சிவ.சு.சரவணன் உடனிருந்தார்.

### மெட்ரோ ரயிலில் பயணிக்க

# வாட்ஸ் ஆப் மூலம் டிக்கெட் விரைவில் புதிய வசதி அறிமுகம்

சென்னை, டிச. 03-

வாட்ஸ் மூலமாக டிக்கெட் எடுத்து பயணிக்கும் வசதியை மெட்ரோ ரயில் நிறுவனம் விரைவில் அறிமுகம் செய்ய உள்ளது.

சென்னையில் மெட்ரோ ரயில்களில் பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மெட்ரோ ரயிலில் பயணிக்க நேரடியாக பயணச்சீட்டு பெறுவது, பயண அட்டை முறை, கியூ.ஆர். கோடு என மூன்று முறைகள் உள்ளன. இதன் தொடர்ச்சியாக வாட்ஸ் ஆப் மூலமாக டிக்கெட் எடுத்து பயணிக்கும் வசதியை மெட்ரோ ரயில் நிறுவனம் விரைவில் அறிமுகப்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதற்காக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பொதுவான கைபேசி எண் பயணிகளுக்கு வழங்கப்படும். இந்த எண்ணுக்கு ஹாய் என வாட்ஸ் ஆப் செய்தால் சாட் போட்டு திறக்கும். பயணியின் பெயர், புறப்படும் மெட்ரோ ரயில் நிலையம், சேர வேண்டிய இடம் உள்ளிட்டவற்றை அதில் பதிவு செய்து பின்னர் வாட்ஸ் ஆப், GPay, paytm, மூலம் டிக்கெட் கட்டணத்தை செலுத்த வேண்டும். பின்னர் பயணிகளுக்கு பயணச்சீட்டு வாட்ஸ் ஆப்-ல் அனுப்பப்படும். அதனை ரயில் நிலையத்தில் முன்னுள்ள டிக்கெட் ஸ்கேனரில் காண்பித்து பயணம் மேற்கொள்ளலாம். இந்த திட்டம் விரைவில் செயல்பாட்டுக்கு வர உள்ளது.